விவிலிய வினாடி வினா

சரியான விடைகளை எழுதியவர்கள்

அருட்சகோதரிகள்

ரெஜினாமேரி FIHM, எதெல்பெர்காமேரி OSM, ஜோசப்பிட்டாமேரி OSM, எஃப்ராசியாமேரி FSAG, பொலன்ஷியா OSM – திருச்சி; எமரென்ஸ்மேரி OSM, ஸ்டெல்லாரோஸ் CIC, செலின் தெரஸ் CIC, மேரி ஆரோக் OSM – திண்டுக்கல்; மேரி செசாரியா SSAM, நேசபாய், ரால்ஃப், மரிய சேலி OSM, லூர்து மேரி CIC, ரூபிமேரி OSM – சென்னை; செலின் SJC, சின்னராணி SJC - அணிலாடி; டோனட்டெல்லா அனஸ்தாசியாள் FIHM – கும்பகோணம்; வித்யா மேரி OSM, ரூபெல்லாமேரி OSM, சிரோன் OSM - நெல்லை; லில்லி இசபெல்லா மேரி OSM, மரிய விஜி OSM – மதுரை; அக்குயிலினா மேரி OSM, லோரா மேரி OSM – தூத்துக்குடி; செபாஸ்டி – விழுப்புரம்; மார்சலோஸா மேரி – பழையகாயல்; லூர்துமேரி – ஆரம்பாக்கம்; விக்டோரியா மேரி DMI – வடகாரைபாறை; அருள் சீலி – முட்டம்; சிரில் SJC - கடலூர்.

பொதுநிலையினர்

பிரான்சிஸ் பேசில், பாத்திமா, சந்தனம், ஆனி பீட்டர் ராஜ், லீமா தெரஸ், மரிய லூமின் பரிமலா, ஜான் ஜோசப், மேரி மார்கரேட், கிளாரா லூர்து மேரி, செலின்மேரி, இமாக்குலேட் சோபியா – திருச்சி; லீலாவதி, இருதய விஜிலா, மார்கரேட் பெல்சியா, அமல செல்வி, அல்போன்சா ஜோதிமேரி – திண்டுக்கல்; மரிய வென்சி, லூசியாள் - சென்னை; மரிய பிரகாசம் - தருமபுரி; புஷ்பக்கண்ணு – கோவை; ஆண்டோ அவிவா - திருப்பத்தூர்; சற்பி – அரியலூர்; வெர்ஜின் லூயிஸ் - பாளையங்கோட்டை; ஜெயராஜ், இமாக்குலேட் - கோவளம்; தங்கராஜ் - கழுகுமலை; ராணி – தூத்துக்குடி.

குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்

அருட்சகோதரி. லில்லி இசபெல்லா மேரி OSM – மதுரை

திருமதி. இருதய விஜிலா – திண்டுக்கல்

Owned and Published by Fr. A. CHINNAPPARAJ, OSM from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. A. CHINNAPPARAJ OSM.

பதிப்பாசிரியர் பக்கம்

விண்மீன்

இறைஇயேசுவில் அன்புநிறை அன்னைமரி பக்தர்களே!

நம் அனைவரது குழந்தைப்பருவத்திலும் நிச்சயம் நமது தாய்மார்கள் வானத்தையும் அதில் உள்ள நிலா மற்றும் விண்மீன்களைக் காட்டி சோறு ஊட்டியிருப்பார்கள். இரவு நேரங்களில் நாம் சிறுபிள்ளைகளாக இருக்கும் போது வானத்தை அண்ணாந்து பார்த்து அல்லது இரவில் வெளியில் படுத்துக்கொண்டு நட்சத்திரங்களை எண்ணிய அனுபவமும் நமக்கு இருக்கும். எண்ணிலடங்கா விண்மீன்கள் கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலும் வான்வெளியில் இருக்கின்றது. விண்மீன்கள் பார்ப்பதற்கு அழகாக இருப்பதோடு மட்டுமல்லாமல் மனிதனின் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்துள்ளது என்பதை ஒருசிலர் நம்புகின்றனர். இதன் வெளிப்பாடுதான் எதிர்காலத்தை விண்மீனைக் கொண்டு கணிக்கும் ஜோதிடம் பிறந்தது. ஏன், இயேசு பிறந்த போது மூன்று ஞானிகளும் கிழக்குத் திசையில் தோன்றிய ஒரு விண்மீனைக் கொண்டு அவர்கள் தங்கள் ஞானத்தால் மெசியாவின் பிறப்பைக் கணித்து தங்கள் பயணத்தை மேற்கொண்டனர் என்பது நாம் அறிந்த உண்மை.

'வானத்தை நிமிர்ந்து பார். முடியுமானால், விண்மீன்களை எண்ணிப் பார். இவற்றைப் போலவே உன் வழிமரபினரும் இருப்பர்' (தொநூ. 15:5; 22:17; 26:6; விப. 32:13) என்று மீண்டும் மீண்டும் ஆபிரகாமின் வழிமரபினரை இறைவன் வானத்து விண்மீன்களைப் போல் பலுகிப் பெருகச் செய்வார் என்ற வாக்குறுதி இன்று நம் மனங்களையும் ஊடுருவுகின்றது. 'வானிலிருந்து விண்மீன்கள் போரிட்டன! தங்கள் பாதையிலிருந்து சீசராவுடன் போரிட்டன!' (நீத 5:20); 'அப்போது வைகறை விண்மீன்கள்

உள்ளே...

மரியா இறைவளின் தாய்	- 05
அன்னையின் திருத்தலங்களை நோக்கி	- 10
புத்தாண்டு வேண்டுதல்	- 15
விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி	- 16
என் வாழ்வில் மரியா	- 18
ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்	- 19
மரியா - கடவுளின் கடிதம்	- 28
புலர்ந்து வரும் புத்தாண்டு	- 32

ஒன்றிணைந்து பாடின!' (யோபு 38:7); 'அவர் தம் வலக்கையில் ஏழு விண்மீன்களைக் கொண்டிருந்தார்' (திவெ 1:16) என்ற இறைவார்த்தைகள் விண்மீன்களை வானதூதர்களுக்கு இணையாகக் கூறுகிறது; 'யாக்கோபிலிருந்து விண்மீன் ஒன்று உதிக்கும்! இஸ்ரயேலிலிருந்து செங்கோல் ஒன்று எழும்பும்!' (எண் 24:17), 'அவரது விண்மீன் எழக் கண்டோம். அவரை வணங்க வந்திருக்கிறோம்' (மத் 2:2) என்ற இறைவார்த்தைகளில் விண்மீன் இயேசுவை குறிக்கின்றது. இப்படி பல இறைவார்த்தை பகுதிகள் விண்மீன்களைப் பற்றி நமக்கு எடுத்துரைக்கின்றன.

அன்னை மரியாவை நாம் மன்றாட்டு மாலையில் 'விடியற்காலையின் நட்சத்திரமே' என்று புகழாரம் சூட்டி வேண்டுகிறோம். இதன் பொருள் விவிலியப் பின்னணியில் பார்த்தோமென்றால், 'பெண் ஒருவர் காணப்பட்டார்; அவர் கதிரவனை ஆடையாக அணிந்திருந்தார்; நிலா அவருடைய காலடியில் இருந்தது; அவர் பன்னிரு விண்மீன்களைத் தலைமீது சூடியிருந்தார்' (திவெ 12:1); 'நான் மீண்டும் ஒரு கனவு கண்டேன்; அதில் கதிரவனும் நிலாவும் பதினொரு விண்மீன்களும் என்னை வணங்கக் கண்டேன்' (தொநூ 37:9) என்ற யாக்கோபின் கனவில் இருக்கும் விண்மீன்கள் ஏனைய தம் சகோதரர்களைக் குறிக்கின்றன. அன்னை மரியா இத்தகைய பன்னிரு குலங்களையும், பன்னிரு திருத்தூதர்களையும் குறிக்கின்ற வண்ணமாக அவற்றைத் தம் தலைமீது முடியாக சூடியிருக்கின்றார்.

மேலும் விடியற்காலையில் தோன்றும் 'வெள்ளி' என்னும் நட்சத்திரமானது இரவு மறைந்து பகல் உதயமாகிறது என்பதை நமக்கு உணர்த்துகிறது. அதே போன்று மனிதகுல மீட்பின் வரலாற்றின் இறைமகன் இயேசு கிறிஸ்துவின் உதயத்திற்கு முன்பாக அன்னை மரியா ஒரு விடியற்காலையின் நடசத்திரம் போல் அவருக்கு முன் தோன்றினார் என்று புனித திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் Redemptoris Mater என்னும் தமது சுற்றுமடலில் கூறுகின்றார். தொடக்கத் திருஅவையிலிருந்தே அன்னை மரியாவை விடியற்காலையின் நட்சத்திரமாகவும் (Morning Star), கடல் நட்சத்திரமாகவும் (Star of the Sea) சித்தரித்து பல பாடல்களும் செபங்களும் இயற்றப்பட்டிருக்கின்றன. மேலும் அன்னை மரியாவை நட்சத்திரமாக உருவகித்து 'அணுகமுடியாத ஒளியின் மகள்', 'விரக்தியில் உள்ளவர்களின் ஒளி', 'புத்துணர்ச்சியூட்டும் ஒளி மண்டபம்' என்று பல்வேறு அடைமொழிகளும் அவருக்கு அளிக்கப்பட்டன.

''சந்திரனைப் போல் அழகுள்ளவளாய்; சூரியனைப் போல் ஒளியுள்ளவளாய்; போர் முனையில் அணிவகுத்து நிற்கும் படையைப் போல் அச்சம் தருகின்றவளாய்; விடியற்காலையைப் போல் அதோ எழுந்தருளி வருகின்றவள் யார்?'' என்று அன்னை மரியாவின் புகழ்ச்சிப் பாடலை செபிப்பதற்கு முன்மொழியாக செபிக்கப்படும் வசனம். அன்று ஆண்டவராகிய மெசியாவின் விண்மீன் தோன்றி கீழ்த்திசையிலிருந்து மூன்று ஞானிகளையும் பெத்லகேம் நோக்கி வழிநடத்தியதுபோல இன்று நம்மையும் அன்னை மரியா என்னும் நட்சத்திரம் தம் மகனும் உலக மீட்பருமான ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை நோக்கி வழிநடத்திச் செல்லும் பணியை செய்து வருகின்றார் என்றால் அது மிகையாகாது. ஆம், அன்னை மரியா நம்மைத் தம் மகனை நோக்கி அனுதினமும் வழிநடத்துகின்றார். அன்னை மரியாவின் துணையை நாடுவோம்; ஆண்டவரின் அருளை நிறைவாகப் பெற்று சுவைப்போம்.

அருள்பணி. சின்னப்பராஜ் ம.ஊ.ச.,
ஜோதி மாதா ஆலயம், சென்னை.

வாசகர்களின் கவனத்திற்கு!

அன்பார்ந்தவர்களே! 2022 ஆம் ஆண்டு சனவரி மாதத்திலிருந்து இவ்விதழின் ஆண்டு சந்தாவானது ரூபாய் 150/- ஆக உயர்த்தப்படுகிறது. இதழ் அச்சிடுவதற்கும் அதை டி ரூபாய் தபால் தலையொட்டி அஞ்சல் செய்வதற்கும் ஆகும் செலவு ஒரு மாதத்திற்கு ஒரு பிரதியின் விலை ரூ 15/- ஆகமேவ இவ்விதழின் ஆண்டு சந்தா ரூபாய் 150/- யை இந்த ஆண்டின் தொடக்கத்திலேயே செலுத்துமாறும் 2021 ஆம் ஆண்டு சந்தாவை செலுத்தாதவர்கள் தயவுசெய்து சந்தாவினை செலுத்துமாறும் கேட்டுக்கொள்கிறேன். இவ்விதழானது பலரை சென்றடையவும் அன்னையின் புகழை பாரதமெங்கும் பகிர்ந்திடவும் ஒத்துழையுங்கள். மேலும் இவ்விதழில் விளம்பரம் செய்ய விரும்புவோர் கீழ்க்காணும் அலைபேசி எண்ணிற்குத் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

பணி. அ. சின்னப்பராஜ் ம.ஊ.ச
8680860308

புலர்ந்து வரும் புத்தாண்டு

திருமதி. ஃபிலோம்மா, திருச்சி.

புலரும் புதியநல் பொலிவுறு ஆண்டில்
புதியன யாவும் மலரட்டும்!
அகிலம் முழுமையும் அமைதியில் திளைத்திட
ஆண்டவர் நிறையருள் பெருகட்டும்!

இறைவனை மறுப்போர் மறப்போர் எல்லாம்
மெய்யொளி கண்டே ஒளிரட்டும்!
அவனியில் உள்ளோர் அனைவரி னுள்ளே
ஆன்மீக அருளொளி மிளிரட்டும்!

கயமை எனும்பெரும் காரிருள் நீங்கி
மனிதமும் நேயமும் விடியட்டும்!
ஒருதாய் மக்கள் நாம்எனச் சொல்லும்
ஒருமைப்பாடுயர்ந் தோங்கட்டும்!

மனிதரை மாய்க்கும் வன்முறைக் கொடுமைகள்
என்றுமே இல்லா தொழியட்டும்!
அன்பும் அறனும் நீதியும் நேர்மையும்
நின்றே உலகினை ஆளட்டும்!

நீர்வளம் நிலவளம் பொருள்வளம் சிறந்து
நானிலம் எங்கும் செழிக்கட்டும்!
சுயநலம் இல்லாப் பிறர்நலம் பேணும்
பேற்றினை உடையோர் வாழட்டும்!

காலத்தைக் கணித்திடும் ஆண்டுகள் யாவும்
நிகழ்வுகள் காட்டிடும் பதிவுகளே!
வரும்புது ஆண்டே! நலன்பல பொழிவாய்!
நிலையாய் உந்தன் பெயரினைப் பதிப்பாய்!

மரியா இறைவனின் தாய்

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
சென்வைட் கான்வன்ட், பணகுடி

தொடக்கவுரை

ஒவ்வொரு புத்தாண்டும் கன்னி மரியா, கடவுளின் தாய் என்ற மாபெரும் பெருவிழாவுடன் உதயமாகின்றது. ஆண்டின் முதல் நாளிலேயே மரியாவை, இறைவனின் தாயாகப் போற்றி அகமகிழ்கின்றது அன்னையாம் திருஅவை. மரியா, இறைவனின் தாய்; அமல உற்பவி; எப்பொழுதும் கன்னியானவர்; ஆன்மாவோடும் உடலோடும் விண்ணகம் எடுத்துக்கொள்ளப்பட்டார் என்னும் மரியாவைப் பற்றிய நான்கு மறையுண்மைகளை ஏற்றுக்கொள்ள கத்தோலிக்க மக்கள் அழைக்கப்படுகின்றோம். பரிசுத்த கன்னி மரியா, இறைவனின் தாய் என்ற மறையுண்மையை இக்கட்டுரையில் சற்று ஆராய்வோம். நம் அன்னையை, இறைவனின் தாயாக உலகமே போற்றினாலும், இறைவன் முன் பேறுபெற்றவராக, ஆசீர் நிரம்பப் பெற்றவராக இருந்த போதிலும் அவர் தன்னை இறைவனின் அடிமையாகப் பணிந்தார். இதனால் அவரது உள்ளம் அருளுக்கு மேல் அருளால் பொங்கி வழிந்தது.

மறை உண்மையின் வரலாறு

தொடக்கத் திருஅவையில் கிறிஸ்தவர்கள் மரியாவை இறைவனின் தாய் என்று அழைத்ததாக அறிகிறோம். இயேசு இறைவன். எனவே அவரின் தாய் மரியா, இறைவனின் தாய் என்று மிக எளிமையாக இம்மறையுண்மையைப் புரிந்து கொண்டார்கள். ஆனால் நெஸ்டோரியன் என்பவர் இதற்கு மாறாக தப்பறையான கொள்கைகளை பரப்பி வந்தார். மக்கள் அவர் பக்கம் சேர முயன்றனர். அவருடைய கூற்று என்னவெனில், இயேசுவும் படைக்கப்பட்டவரே; மனித இயல்பு மட்டும் உடையவர்; அவரிடம் இறைஇயல்பு இல்லை; எனவே மரியா இயேசுவின் அன்னை மட்டுமே; அவர் இறைவனின் அன்னை அல்ல. எனவே திருஅவை இந்த தப்பறையான கொள்கையை முறியடிக்கவும், மரியா

இறைவனின் தாய் என்பதை நிலைநாட்டவும், இயேசுவின் தெய்வீக இயல்பை உறுதிப்படுத்தவும் கி.பி. 431 ஆம் ஆண்டு ஜூன் 22 ஆம் நாள் எபேசு சங்கத்தைக் கூட்டியது. இக்கூட்டத்தில் மரியா இறைவனைத் தாங்கியவர் என்ற பொருள் நிறைந்த 'தெயோதோக்கோஸ்' என்ற கிரேக்க வார்த்தையைப் பயன்படுத்தியது. 'இம்மானுவேல் உண்மையிலேயே கடவுள்' எனவே பேறுபெற்ற கன்னி மரியா உண்மையிலேயே இறைவனின் தாய். ஏனெனில் அவர் கடவுளிடமிருந்து பிறந்த வார்த்தையானவரை ஊனுடலில் ஈன்றெடுத்தார். எவரொருவர் இந்த உண்மையை ஏற்றுக்கொள்ளவில்லையோ அவர் சபிக்கப்பட்டவராவார் என்றும் சங்கம் தெளிவுபடுத்தியது.

மரியா இறைவனின் தாய்

'மரியா உண்மையிலேயே இறைவனும் மீட்பருமானவரின் தாய் என ஏற்றுக்கொள்ளப்பெற்று போற்றப் பெறுகிறார்' என்று கூறிய இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் (தி.எண். 53) தூய கன்னி இறைவனின் தாய் என்னும் கொடையாலும் அலுவலாலும் மீட்பரான தன் மகனோடு ஒன்றித்திருக்கிறார் (தி.எண. 63) என்று இன்னும் ஆழமாக இந்த நம்பிக்கைக் கோட்பாட்டை பலப்படுத்தியது. மரியா இறைவனின் தாய் என்று திருஅவை அறிக்கையிட்டபோது கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டது. கடவுளாகிய இயேசுவில், தெய்வீகத்தன்மையும் மனிதத்தன்மையும் பிரியா வண்ணம் இணைந்திருந்தன.

வானதூதர் வாழ்த்துக் கூறியதும் மரியா தனது உடலிலும் உள்ளத்திலும் இறைவார்த்தையை ஏற்றார். வாழ்வை உலகிற்கு அளித்தார். எனவே அவர் உண்மையாகவே கடவுளும் மீட்பருமானவரின் தாய் என ஏற்றுக்கொள்ளப் பெற்று போற்றப் பெறுகிறார். தம் மகனின் பேறுபலன்களை முன்னிட்டு அவர் சீரிய முறையில் மீட்கப்பெற்று நெருங்கிய, பிரிக்க முடியாத முறையில் அவரோடு இணைக்கப் பெற்றிருக்கிறார். இறைமகனின் தாய் என்ற இந்த உன்னத நிலையாலும் பெருமையாலும் அணி செய்யப் பெறுகின்றார். இதன் காரணமாக, தந்தைக்கு மிகவும் உகந்த மகளாகவும், தூய ஆவியாரின் திருக்கோவிலாகவும் திகழ்கின்ற இந்த மேன்மையான அருட்கொடையினால் வானத்திலும் வையத்திலும் உள்ள மற்ற எல்லாப் படைப்புக்களையும் விட மிகவும் சிறப்புற்று விளங்குகின்றார் என இரண்டாம் வத்திக்கான் சங்கம் மிக அழகாக அன்னையைப் பற்றி எடுத்துக் கூறுகிறது (தி.எண் 53).

பழைய ஏற்பாட்டு, புதிய ஏற்பாட்டுத் திருநூல்களும் மாண்புக்குரிய மரபும் நிறைவாழ்வுத் திட்டத்தில் மீட்பரின் தாய்க்குரிய பணியை மென்மேலும் அதிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. மீட்பரின் தாயான ஒரு பெண்ணின் உருவைப் படிப்படியாகத் தெளிவாய்க் காட்டுகின்றன. முதல் பெற்றோர் பாவம் செய்தபின், அலகையின் மேல் பெறப்போகும் வெற்றியைப் பற்றிய வாக்குறுதி அவர்களுக்கு அளிக்கப்பெற்றது. இவ்வாக்குறுதியில் மரியா இறைவாக்காக முன்னுருவகிக்கப் பெற்றார் (தொநூ 3:15). மேலும் கடவுள் நம்முடன் இருக்கிறார் எனப் பெயர் பெறப்போகும் மகனைக்

தனித்தன்மை

தனித்தன்மை என்பது இந்த தகுதியுடமைத் தத்துவத்தின் இயல்பான விளைவாக எழுவதுதான். இறைவனால் தர இயன்ற அத்தனைச் சிறப்புக்களையும் பெற்றவளாக மரியாவை கற்பனைச் செய்து பார்க்கும்போது அவர் மற்ற மனிதர் அனைவரையும் விட எல்லா வகையிலும் தனித்து உயர்ந்து ஈடு இணையற்றவராக தோன்றுவதில் வியப்பில்லை. எனவே இக்கண்ணோட்டத்தில் மரியா கறைபட்ட மனிதகுலத்தில் தனியொரு பெருமை. ஊனமுற்ற மக்களினத்தின் ஒப்பற்ற முழுமை. அவர் ஒரு மானிடப்பிறவியாக இருப்பினும் வேறு எந்த மனிதரும் எட்ட இயலாத அளவு உயர்ந்தவர். இந்தப் பாணியில் மரியியல் சிந்தனை தொடர தொடர, பெரும்பான்மையான மக்களின் மனதில் மரியா மெல்ல மெல்ல தெய்வப் பிறவியாக தோற்றமளிக்கின்றார். எல்லோரையும் போல் இவ்வுலகில் வாழ்ந்து மண்ணுலகம் வாழ் மனிதர்க்கு ஏற்றமிகு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கிய மரியா விண்ணுலகத் தாயாக, அகிலத்தின் அரசியாக அன்றாட மக்கள் வாழ்விலிருந்தும் சமூகப் பிரச்சனைகளிலிருந்தும் அந்நியமாக்கப்பட்டார்.

இணை ஒப்புமை

இவ்வாறு மரியா விண்ணுலக மங்கையாக எந்த அளவுக்கு மனித நிலையிலிருந்து தொலைவுபடுத்தப்பட்டாரோ அந்த அளவுக்கு அவர் இயேசுவுடன் அதிகமதிகமாக ஒப்பிடப்பட்டார். இயேசுவின் பண்புகளும் பணிகளும் அப்படியே அவருக்கும் ஏற்றிக் கூறப்பட்டார். அவரது சிறப்புக்களும் பெருமைகளும் மரியாவுக்கும் உரியவையாகக் கருதப்பட்டன. இவ்வாறு இயேசு மீட்பர் என்றால் மரியா இணை மீட்பர் எனவும், இயேசு இறைவனுக்கும் மனிதருக்கும் இடைநிலையாளர் என்றால் மரியா இயேசுவுக்கும் மனிதர்களுக்கும் இடைநிலையாளர் எனவும் கருதப்படலாயின. மேலும் இயேசுவுக்கு விண்ணேற்றம் என்றால் மரியாவுக்கு விண்ணேற்பு. இயேசு அரசர் என்றால் மரியா அரசி என்றெல்லாம் இயேசுவுடன் இணை ஒப்புமை உடையவராக மரியாவைப்பற்றி எழுதுவதும் போதிப்பதும் பழக்கமாக மாறியது.

முடிவுரை

தகுதியுடமை, தனித்தன்மை, இயேசுவுடன் இணை ஒப்புமை என்னும் மரியியல் தத்துவங்கள் தவறானவை அல்ல. உண்மை மரியாவை ஆழமாக புரிந்துகொள்ள நிச்சயம் அவை உதவியுள்ளன. ஆனால் 18, 19 ஆம் நூற்றாண்டுகளிலும் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இத்தத்துவங்கள் பெரிதும் மிகைப்படுத்தப்பட்டன. பொதுமக்கள் பலரது பக்தியிலும், மரியா வணக்கத்தைப் பரப்பிய பல போதகர்களது உரைகளிலும், சில மரியியல் சிந்தனையாளரது எழுத்துக்களிலும் கிறிஸ்தவத்தில் இயேசுவுக்கு உள்ள மைய இடத்தையே மரியா மறைத்திடும் அளவுக்கு இத்தத்துவங்கள் கையாளப்பட்டது. இதன் விளைவாக இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முற்பட்ட காலத்தில் கத்தோலிக்க சமூகங்கள் பலவற்றின் வாழ்விலும், வழிபாட்டிலும் சமய சிந்தனைகளிலும் பக்தி முறைகளிலும் ஒரு வகை 'மரியா மையம்' நிலவியது எனலாம்.

கடந்த 7 மாதங்களாக வெளிவந்த அப்படியே ஆகட்டும் இதழில், 'மரபு சிந்தனையில் மரியா' என்று ஆழமாக சிந்தித்தோம். ஆனால் இன்று நாம் 21 ஆம் நூற்றாண்டில் வாழ்கின்றோம். இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் திருஅவையில் ஒரு பெரும் மறுமலர்ச்சியைக் கொண்டு வந்தது. இறையியலில் எல்லா பகுதியிலும், சிறப்பாக மரியியல் சிந்தனையிலும் ஒரு பெரும் மாற்றத்தைக் கொண்டு வந்தது. அடுத்த இதழ்களில் 'மறுமலர்ச்சி சிந்தனையில் மரியா' என்னும் தலைப்பில் சிந்திப்போம்.

அனுபவங்களிலிருந்து தோன்றிய மரியாவின் மாசற்ற இருதயத்திற்கு மனுக்குலத்தை ஒப்புக்கொடுத்தல், ரஷ்யாவின் மனந்திரும்புதலுக்காக செபித்தல், மரியாவின் உருவங்களின் உலகம் சுற்றும் ஊர்வலங்கள் என பல்வேறு புதுப்புது பக்தி முயற்சிகள் முளைத்தன. மேலும், காட்சிகளில் மரியா சொல்லிச் சென்றதாகக் கூறப்படும் இரகசியங்கள் விசுவாசிகள் பலரின் விபரீதக் கற்பனைகளுக்கும், ஒரு சில சமய பழமை வெறிக்குழுக்களின் பக்தி போர்வை போர்த்திய பயமுறுத்தல்களுக்கும், உலக முடிவு, அழிவு போன்ற அச்சுறுத்தல்களுக்கும் வழிவகுத்தன. காட்சி அனுபவங்களில் இறைச் செய்தியுடன் இயல்பாகவே கலந்துக் கிடக்கும் காட்சியாளரது சொந்தக் கற்பனைகள், மிகைப்படுத்தப்பட்ட எண்ணங்கள், உணர்ச்சிகள், அவர்களது காலத்து சமூக கூட்டு பேரச்சங்கள், ஏக்கங்கள் பலவும் கடவுளின் வார்த்தை என கருதப்பட்டன. இவ்வாறு பொது இறைவெளிப்பாடாக (Public Revelation) விவிலிய செய்தியைவிட தனி வெளிப்பாடாகிய (Private Revelation) காட்சி செய்திகளே முக்கியமாகி மரியா பக்தியின் பல வகைகளும், மரியா பற்றிய சிந்தனைகளில் பல வடிவங்களும் விசுவாச மையத்திலிருந்து கொஞ்சம் தடம் மாறி வளரலாயின.

மரபு மரியியல் சிந்தனைகளின் மையத்தத்துவங்கள்

இவ்வாறு பல்வேறு தாக்கங்களுக்கு ஆளாகி *18 – 19* ஆம் நூற்றாண்டுகளிலும், 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் மரியா வணக்கம் சிந்தனையும் மாபெரும் வளர்ச்சி கண்டன. இந்த வளர்ச்சிக்கு அடிப்படையாக இருந்த முக்கிய தத்துவங்கள் மூன்று. இவற்றை நாம் மரியாவின் தகுதியுடமை, தனித்தன்மை, இயேசுவுடன் இணை ஒப்புமை என அழைக்கலாம்.

தகுதியுடமை

என்னென்ன சீரும் சிறப்பும் இறைவனால் ஒரு மானிட பிறவிக்கு செய்ய முடியுமோ அத்தனை சிறப்புக்களையும் பெற மரியா ஏற்புடையவர் என்பதே தகுதியுடமைத் தத்துவத்தின் உட்பொருள். இயேசுவை இறைவன் என ஏற்றுக்கொள்ளும் கிறிஸ்தவம் அவரது தாயை இறைவனின் தாய் என அழைக்கின்றது. இறைவனின் தாய் என்ற வகையில் எந்த பெருமையும் அவருக்கு மிகையாகாது. எனவே என்னென்ன வகைகளில் ஒரு மானிடப் பிறவியை இறைவன் அணி செய்ய இயலுமோ அத்தனை வகையிலும் அவர் தம் தாய் மரியாவை அணி செய்ய தவறியிருக்க மாட்டார். இதைத்தான் தகுதியுடமை குறிக்கிறது. இதன் அடிப்படையில் அன்றைய மரபு மரியியல் சிந்தனையானது என்னென்ன வகையிலெல்லாம் கடவுள் மரியாவை அணி செய்ய முடியும், என்னென்ன சிறப்புக்களை அவருக்கு அளித்திருக்க முடியும், என்னென்ன உயரிய பெருமைகளுக்கு அவரை உரியவர் ஆக்கியிருக்க முடியும் என கற்பனை செய்து பார்ப்பதில் அதிக கவனம் செலுத்தியது. மரியாள் மன்றாட்டு மாலையில் வரும் பல்வேறு அடைமொழிகள் இதற்கு சிறந்ததொரு எடுத்துக்காட்டு. ஆனால் இவ்வாறு மரியா பக்தர்களும் மரியியல் சிந்தனையாளர்களும் தாங்களாகவே கற்பனை செய்து மரியாவுக்கு ஏற்றிக்கூறிய தனிப்பெரும் சிறப்புக்களுக்கு விவிலியத்திலோ விசுவாச மரபு கோட்பாட்டிலோ என்ன அடிப்படை இருக்கிறது என எண்ணிப் பார்ப்பதில் அவர்கள் அதிக கவனம் செலுத்தவில்லை. இதனால் வரலாற்றில் வாழ்ந்த மரியாவின் உண்மையில் சிறந்து விளங்கிய பண்புகள் பல முக்கியத்துவம் இழந்து மரியாவின் பக்தர்களின் கற்பனையில் விளைந்த உருவகங்களும் புனைவுச் சிறப்புக்களுமே முன்னணிக்கு வந்தன.

கருத்தாங்கிப் பெற்றெடுப்பார் என்று கூறப்பெற்ற கன்னியும் இவரே (எசா 7:14; மீக் 5:2-3; மத் 1:22-23).

ஒரு பெண்ணால் சாவு வந்ததுபோல மற்றொரு பெண்ணால், மரியாவால் வாழ்வு வர வேண்டும் என்று கிறிஸ்து மனுவுரு எடுக்கும் முன்பே அவருக்குத் தாயாக நம் அன்னை முன்குறித்து வைக்கப்பட்டார். அன்னையும் இத்திட்டத்தை முழுமையாக நிறைவேற்றினார். தூய்மையின் மாட்சியால் அணிசெய்து அன்னையை இறைவன் அருள் நிறையப் பெற்றவராக உயர்த்தியிருந்தார். இறைவனின் அடிமை என்று கூறியதால் மீட்புத்திருவுளத்தை ஏற்று தம் மகனுக்கும் அவரின் அலுவலுக்கும் தன்னையே முழுமையாகக் கையளித்தார். இவ்வாறு அவருக்குக் கீழும், அவருடனும் எல்லாம் வல்ல இறைவனின் அருளால் மீட்புத்திட்டத்தில் மரியா பணிபுரிந்தார். இவ்வாறு மரியா இறைவனின் கையில் ஒரு சிறப்பான கருவியாக செயல்பட்டார். தூய இரேனியு கூறுவதுபோல, 'மரியா தன் கீழ்ப்படிதலால் தானும் மனித இனம் அனைத்தும் நிறைவாழ்வு பெறுவதற்குக் காரணமானார்'.

இறைவனின் தாயின் விழா

மரியா இறைவனின் தாய் என்ற விழா ஜனவரி முதல் நாள் கான்ஸ்டான்டிநோபில் என்ற நகரில் ஏழாம் நூற்றாண்டிலிருந்தே சிறப்பிக்கப்பட்டதாக அறிய வருகிறோம். உரோமை நகரில் இவ்விழா 13,14 ஆம் நூற்றாண்டுகளில் இடம் பெற்றிருக்கின்றது. இந்த விழாவையொட்டிய செபங்கள், பாடல்களில் அன்னை மரியாவின் தாய்மையைப் புகழ்ந்து முன்மொழிகள், சிறுமறுமொழிகள் அமைந்துள்ளன. உரோமையில் பரிசுத்த கன்னிமரியாவின் தாய்மைப்பேற்று விழா ஒரு வாரம் புனித அகுஸ்தினார் பேராலயத்தில் சிறப்பிக்கப்பட்டது. அங்குள்ள புதுமையான அன்னையின் சுரூபம் முன்பாக சுற்றுவட்டாரத்திலுள்ள பக்தர்கள் குவிந்தனர். பாதுகாப்பான பேறுகாலம், ஆரோக்கியமான குழந்தைப் பேறு, தாய்மைப்பேறு அடைய என்ற பலவகையான வேண்டுதல்களோடு பெண்கள் இங்கு இறைவேண்டல் புரிந்தனர். எரியும் மெழுகுவர்த்திகள், பூக்கள், புன்முறுவல் பூத்த குழந்தைகளின் நிழற்படங்கள், தவழும் குழந்தைகளின் உருவங்கள் என அன்னை புன்முறுவலோடு காட்சியளித்து அன்னையின் தாய்மைப்பேறு அவரை அண்டிச்

செல்வோருக்கு அருளும் வரங்களை எடுத்தியம்புகின்றன. பல்வேறு இடங்களில் வெவ்வேறு நாட்களில் கொண்டாடப்பட்டு வந்த இந்த விழா 1931 ஆம் ஆண்டுதான் திருஅவையின் அங்கீகரிக்கப்பட்ட விழாவாக மாறியது. திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் 1974 ஆம் ஆண்டு பிப்ரவரி 2 ஆம் நாள் வெளியிட்ட 'Marialis Cultus' என்ற அறிக்கை வழிபாட்டில் நாம் இறைவனின் தாய் மரியாவுக்கு செலுத்த வேண்டிய முக்கியத்துவத்தைப்பற்றி தெளிவாகக் கூறுகிறது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பிறகு 1974 ஆம் ஆண்டு திருத்தந்தை ஆறாம் பவுல் இவ்விழாவைத் திருஅவை முழுவதும் ஆண்டின் முதல் நாள் சிறப்பிக்கப் பணித்தார். மேலும் அவரது அறிவுரைகள் இந்த நாளில் அதிகமாக சிந்திக்கப்பட்டு செயல்பாடுகளுக்கு இட்டுச் செல்ல வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

விழா தரும் செய்தி

மரியா இறைவனின் தாய் என்ற மாபெரும் விழா நமக்குத் தரும் செய்தியை நமதாக்குவது நமது கடமை. வெறும் பக்தி முயற்சிகளில் மூழ்கிவிடாதபடி, அன்னையைப் போன்று ஆக்கமுள்ள கருவிகளாக இறைவனின் கரங்களில் செயல்பட நாமும் அழைக்கப்படுகிறோம். மரியா ஒரு சாதாரணப் பெண் ஆனால் இறை அருளோடு ஒத்துழைத்தவர். அவரை ஒரு பெண்மனி ஏத்திப் போற்றிய போது, இயேசு நாமும் இறைவார்த்தையின்படி வாழும்போது பேறுபெற்றோர் ஆகிறோம் என்று நம்மை உற்சாகப்படுத்துகிறார். மீட்பின் திட்டத்தில் மரியா இறைவனின் தாயாகும் பொறுப்பினை முழுமையாக நிறைவேற்றியது போல நமக்கு இறைவன் வகுத்திருக்கும் திட்டத்தை தூய ஆவியாரின் உதவியால் உணர்ந்து அதை நிறைவேற்ற முயல்வோம். இறைவனின் தாய் நமது தாயுமாவார். தனது அன்பு மகனைப் பெற்று, உருவாக்கி, ஆளாக்கி இறையாட்சிப் பணியை ஆற்ற மகிழ்வுடன் அனுப்பி வைத்ததுபோல அவர் தம் மக்களையும் இயேசுவின் சீடர்களாக்க விரும்புகிறார். அவரைப் போன்று அடிமையாக, ஆனால் விடுதலை உணர்வுகளோடு இறையாட்சிப் பணியில் அனைவரையும் அன்பு செய்வோம், அரவணைப்போம்.

நம் மரியன்னையிடம் கேட்க வேண்டிய மன்றாட்டு நாம் அனைவரும் நல்ல உடல் நலமும், ஆன்மீக பலமும் கொண்டு வாழ வேண்டும் என்பதாகும். நாம் ஒரு அழிவுக் கலாச்சாரத்திற்கு தள்ளப்படுகிறோம். உயிர்கள் துச்சமெனக் கருதப்படுகின்றன. விருப்பமின்றி பெண் குழந்தைகளை பெற்றோர்கள் பெற்றெடுக்கின்றனர். கருவிலே இவர்களுக்கு கல்லறை கட்டப்படுகின்றது. போதிய உடல் நலமில்லாமல் எத்தனையோ பெண்கள் பேறுகால நேரத்தில் இறக்கின்றார்கள். நமது தாய் மரியா தனது அன்புக் குழந்தையை தீவனத் தொட்டியில் கிடத்தினார். ஆனால் லூக்கா நற்செய்தியாளர் மிகக் கவனமாக சொல்கிறார். மரியா தனது குழந்தையை துணிகளில் பொதிந்து கிடத்தினார். இறைவனின் கொடை தாய்மைப்பேறு. நமது தாய் மரியாவைப் போன்று தாய்மையைப் போற்ற, உயிர்களைக் காப்பாற்ற அவரிடம் மன்றாடுவோம். புனித எலிசபெத்துவின்

தனிப்பட்ட வெளிப்பாடுகளால் மக்களின் ஆன்மீகமும் பக்தியும் வளர வாய்ப்புக்கள் நிறைய உண்டு.

இக்காலக்கட்டத்தில் மக்கள் அதிகமாக காட்சிகள் (apparitions) அருங்குறிகள் (signs) புதுமைகள் (miracles) இவற்றைத் தேடிச் செல்வதைப் பார்க்கின்றோம். 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே திருஅவையின் ஆய்வாளர்களும் 'பொருள் கோளியல்' (Hermeneutics) என்ற ஆய்வு முறையை (Research Method) பயன்படுத்தி விவிலியம் மற்றும் மறைசார்ந்த நூல்களை ஆய்வுக்கு உள்ளாக்குகின்றார்கள். ஒரு ஆசிரியர் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுதிய வார்த்தைகளை இன்று நம் காலம் மற்றும் சூழ்நிலைகளுக்கு உகந்தவாறு புரிந்துகொள்ளுதல்தான் பொருள்கோளியல் ஆகும்.

இந்த ஆய்வு முறையில் 4 வகைகள் உண்டு

1. உண்மையாக / வரலாற்று பூர்வமாக புரிந்துகொள்ளல் (Literal / historical interpretation)
2. அறநெறி மற்றும் படிப்பினையாக புரிந்துகொள்ளல் (Moral interpretation)
3. குறியீடு மற்றும் அடையாளம் சார்ந்து புரிந்துகொள்ளல் (Allegoraical / Symbolic interpretation)
4. மெய்யுணர்வு மற்றும் ஆன்மீக வெளிப்பாடாக புரிந்துகொள்ளல் (Analogical / Mistical or Spiritual interpretation)

பொதுவாக மரியாவின் காட்சிகள் நான்கு வகையைச் சார்ந்தது. இக்காட்சிகளை வாசிக்கும்போது வரலாற்று உண்மையாகவோ அல்லது மரியா வாழ்வின் உண்மை வெளிப்பாடாக புரிந்துகொள்ளாமல் காட்சி காண்பவரின் ஆன்மீக உணர்வுகளும் தேடல்களும் வெளிப்படும் கருவியாக நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

கடந்த 200 ஆண்டுகளில் கத்தோலிக்க திருஅவையில் நூற்றுக்கணக்கான மரியாவின் காட்சிகள், அருங்குறிகள், அற்புதங்கள் நடந்ததாக நம்பப்படுகின்றது. அதில் ஒரு சில காட்சிகளையும், அருங்குறிகளையும், அற்புதங்களை மட்டுமே திருஅவை அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்துள்ளது. வேளாங்கன்னி காட்சியைத்தவிர, ஏனையவை ஏறக்குறைய எல்லாவற்றிலுமே, மரியா தன் மகன் இயேசு இன்றி தனியாக காட்சி அனுபவமானது குறிப்பிடத்தக்கது. இந்த வேறுபாடு பொதுவாக இயேசுவுடன் மரியா தோன்றும் முன்னைய காலத்து காட்சி அனுபவங்களிடமிருந்து இக்காலத்தை இனம் பிரித்துக் காட்டுகின்றது. மரியா மட்டுமே தோன்றி இக்காட்சி அனுபவங்கள் இயல்பாகவே மக்கள் கவனத்தை மரியா மீது ஈர்த்ததில் வியப்பில்லை. மேலும் இக்காட்சி அனுபவங்களுடன் இணைந்து அல்லது இக்காட்சியிடங்களில் தொடர்ந்து நிகழ்ந்த வியப்பூட்டும் பல்வேறு அருங்குறிகள் மக்களிடம் மிகுந்த பரபரப்பையும் மரியா மீது ஒரு வித பக்தி வேகத்தையும் மூட்டிவிட தவறவில்லை.

கடந்த இருநூறு ஆண்டுகளாக இக்காட்சிகள் மரியா வணக்கத்தையும் சிந்தனையையும் பாதித்தது மட்டுமன்று, மரியா வணக்கத்திற்கும் சிந்தனைக்கும் பெருமளவிற்கு இவையே அடிப்படையாகவும் அமைந்தன. இவ்வாறு மரியா என்றதும் மக்கள் மனதில் எழுந்தது விவிலியம் சித்தரித்துக் காட்டும் வரலாற்றுப்பெண் மரியாவின் விசுவாச உருவம் அன்று. மாறாக, லூர்து, பாத்திமா, குவாதலூப்பே, வேளாங்கன்னி என்னும் காட்சிகளின் உருவமே தோன்றும் நிலை ஏற்பட்டது. புதிய ஏற்பாட்டு மரியாவின் வாழ்வு மாந்தர் அனைவருக்கும் சொல்லும் செய்தியைவிட ஒரு சிலருக்கு காட்சியாகி மரியா சொல்லிச் சென்றதாக கூறப்படும் செய்திகளே அதிக முக்கியத்துவம் பெறலாயிற்று. இத்தகைய காட்சி

7

மரியா - கடவுளின் கடிதம்

அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

மரபு சிந்தனையில் மரியா

மரியா காட்சிகள்

கத்தோலிக்க மக்களின் கவனத்தை மரியாபால் ஈர்த்த காரணங்களில் மிக முக்கியமானது மரியாவின் காட்சிகள். 19 — 20 ஆம் நூற்றாண்டுகள் மரியா காட்சி அனுபவங்களின் 'சிறப்புக்காலம்' என கருதப்படுகிறது. கத்தோலிக்க வரலாற்றில் மிகவும் பெயர்பெற்ற பாரிசு நகர் திருஉருவம் (Miraculous Medal). லா சலேத், லூர்து, பாத்திமா, மெஜுகோரி (Medjugori), வேளாங்கன்னி என்னும் காட்சி அனுபவங்கள் நிகழ்ந்தது இக்காலக்கட்டத்தில்தான்.

மரியாவின் காட்சிகளைப்பற்றி கத்தோலிக்க திருஅவையின் போதனைகள் என்ன என்பதைப் பார்ப்போம். மரியாவின் காட்சிகள், திருஅவையின் மீதும், அதன் பிள்ளைகள் மீதும் மரியா கொண்டுள்ள தாய்மை அன்பின் வெளிப்பாடாக திருஅவை போதிக்கின்றது. விண்ணகம் சென்ற மரியா தனது பிரசன்னத்தையும், வழிநடத்துதலையும் இக்காட்சிகள் மூலமாக தொடர்கிறார். இவ்வாறு தனது மீட்பின் அலுவலை தொடர்ந்து செய்து வருகின்றார்.

கத்தோலிக்க திருஅவை தன்னுடைய ஆசிரிய அதிகாரத்தால் (Magisterium) போதிப்பது என்னவென்றால், விவிலியம் எழுதி முடிந்தவுடன் கடவுளுடைய எல்லா பொது வெளிப்பாடுகளும் (Public Revelation) நிறைவுபெற்றது. மனிதனுடைய மீட்பிற்கும் வாழ்விற்கும் தேவையான கடவுளின் எல்லா வெளிப்பாடுகளும் திருவிவிலியத்தில் முழுமையாக கொடுக்கப்பட்டுள்ளது. ஆயினும், கடவுளின் திட்டங்களும், வெளிப்பாடுகளும், இயேசு, மரியா மற்றும் புனிதர்கள் அனுபவிக்கின்ற காட்சிகள் (Aparitions) வழியாகத் தொடர்கின்றன. அவை தனிப்பட்ட வெளிப்பாடுகள் (Private Revelation) என திருஅவை போதிக்கின்றது. இந்த வெளிப்பாடுகளை உண்மை நிகழ்வுகளாகவோ அல்லது வரலாற்று உண்மையாகவோ எடுத்துக்கொள்ளக் கூடாது எனவும் திருஅவை அறிவுறுத்துகின்றது. மாறாக இக்காட்சிகள் கூறும் உண்மைகள் அல்லது நிகழ்வுகளை விவிலிய உண்மைகளோடு பொருத்திப் பார்க்க வேண்டும். விவிலிய உண்மைகளுக்கு எதிராகவோ அல்லது திருஅவையின் ஆசிரிய போதனைகளுக்கு எதிராகவோ இந்த தனிப்பட்ட காட்சிகளை கடவுளிடமிருந்து வருகின்ற உண்மையாக அல்லது கடவுளின் வெளிப்பாடாகக் கருதக்கூடாது எனவும் திருஅவை விளக்குகிறது. இந்த தனிப்பட்ட வெளிப்பாடுகளை எல்லோரும் கண்டிப்பாக நம்ப வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அதே நேரத்தில் இந்த

பேறுகால வேதனையில் அவருக்கு உதவிசெய்ய மரியாவை இன்றைய பெண்கள் பின்பற்றட்டும்.

கிறிஸ்துவோடு ஒன்றித்த மரியாளின் வாழ்வு திருஅவைக்கும், இந்த உலகிற்கும் ஒரு கொடையாகும்; தூண்டுதலாகும். திருத்தந்தை 23 ஆம் அருளப்பர் கூறுகிறார்: அன்னையின் தாய்மைப்பேற்று விழாவை உலக அமைதி நாளாகக் கொண்டாட வேண்டும். அவர் மகன் இயேசு கொண்டுவந்த அமைதி உலகமெங்கும் சென்றடைய வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். இதை அடிப்படையாகக் கொண்டுதான் ஆறாம் சின்னப்பர் தனது சுற்றுமடலை நமக்குத் தந்து அன்னையின் அழகிய வாழ்வைப் பின்பற்ற அழைப்பு விடுத்தார். திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர், மரியா அருள் நிறைந்தவர் என்றால் அவர் இறைவனோடு நெருங்கிய உறவில் இணைந்திருந்தார் என்பதாகும். அவரைப் போன்று நாமும் இறைவனை நெருங்கிச் செல்வோம். அன்னையின் உள்ளார்ந்த தியான யோக வாழ்வை, இறைச் செயல்பாடுகளை உள்ளத்தில் இருத்தி சிந்திப்பவர்களாக வாழ்வோம் என்று கூறுகிறார். திருத்தந்தை பிரான்சிஸ் கடவுளின் தாயைப்பற்றிக் கூறும்போது, ஆண்டின் முதல் நாளில் எண்ணிக்கை நூலில் வாசிக்கப்படும் ஆசியை நம்முன் வைக்கின்றார். இறைவன் தரும் ஆசி, அருள், அமைதி அனைத்தையும் நிறைவாகப் பெற்றவர் மரியா. இவர் இயேசுவின் தாய், இறைவனின் தாய், திருஅவையின் தாய், திருஅவை கிறிஸ்துவின் உடல். இவ்வாறு திருத்தந்தையர்கள் மரியாவின் பணியை, திருஅவையின் பணியிலிருந்து பிரிக்க முடியாது என்றும் தாயைப்போன்று அவர் திருஅவையை அனைத்து இக்கட்டுகளிலிருந்தும் காப்பாற்றி வருகிறார் என்றும் இறைமக்களுக்கு கூறி உணர்த்துகின்றார்.

நிறைவுரை

"வாழ்க புனித அன்னையே! விண்ணகத்தையும் மண்ணகத்தையும் என்றும் ஆளும் அரசரைப் பெற்றெடுத்தவர் நீரே" என்று இன்றைய வழிபாட்டின் அழைப்பு பல்லவி மரியாவைப் புகழ்கின்றது. 'இறைவனின் தாய் என்னிடம் வர நான் பேறுபெற்றது எப்படி?' என்று புனித எலிசபெத்து மரியாவை இறைவனின் தாயாக அறிவிக்க, இறைவன் இசைவு கொண்டார். கடவுளின் தாய் மரியா என்ற இந்த பெருவிழா நமக்குத் தரும் விந்தைகளை வாழ்வாக்குவோம். நம் தாய் நம்மிடம் சொல்வது என்ன? 'அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்' என்பதாகும். இயேசுவின் போதனைகளின்படி வாழ்வதை நம் அன்னை விரும்புகிறார். அவர் விருப்பத்தை நிறைவேற்றி அவரின் அன்பு மக்களாக வாழ்வோம்.

அன்னையின் 37 திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., மாமல்லபுரம்.

வியாகுல அன்னை ஆலயம்
புனித மரியன்னை பேராலயம், மதுரை

தழிழ்ச் சங்கம் கண்ட மதுரை மாநகர், இந்திய வரலாற்றில் தன்னிகரற்ற இடமாகும். மதுரை மாநகரை தங்கள் வசமாக்க நடந்த போர்களும், அதில் வெற்றி பெற்று, அங்கிருந்து ஆட்சி செலுத்தியவர்களின் பட்டியலே நம்மை வியப்பில் ஆழ்த்தும். பாண்டியர்கள், சோழர்கள், விஜயநகர் நாயக்கர்கள், சுல்தான்கள், மராட்டியர்கள் மற்றும் ஆங்கிலேயர்கள் என மதுரை மீது நாட்டம் கொள்ளாதவர்கள் இல்லை எனக்கூறலாம். பழமை வாய்ந்த நகரமான மதுரை பரந்து விரிந்த நகரமாகவும் இருந்தது.

முத்துக்குளித்துறை கிறிஸ்தவர்களில் பலர் வாணிபத்திற்காக மதுரை வந்தனர். இவர்களின் ஆன்மீக தேவைகளைப் பூர்த்தி செய்ய கி.பி. 1594 அல்லது 1596ல் இயேசு சபை அருட்பணி. கொன்சாலோ பெர்னாந்தெஸ் மதுரை வந்தார். மதுரை நாயக்கர்களின் அனுமதியோடு ஒரு சிற்றாலயத்தையும், சிறிய குருக்கள் இல்லத்தையும் கட்டினார். ஏறக்குறைய 12 ஆண்டுகளுக்கு பிறகும், அதாவது கி.பி. 1606 ஆம் ஆண்டு வரை மதுரையில் புதிதாக எவரையும் மனமாற்றம் செய்யவும் இல்லை, திருமுழுக்கும் கொடுக்கவில்லை.

கி.பி. 1606ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அருட்பணி. இராபர்ட் தே நோபிலி இயேசு சபை மலபார் மறைமாநிலத்தின் தலைவர் அருட்பணி. ஆல்பர்ட் லசாரியோவுடன் மதுரை வந்தார். நோபிலி அவர்கள் தன்னுடைய முன்னோடியான அருட்பணி. கொன்சாலோவின் பணியின் தேக்கநிலையை அறிந்தார். அதற்கு, அவர்கள் ஹபரங்கிஹ என்றழைக்கப்பட்டதும், கருப்பு நிற அங்கி அணிந்திருந்ததும் காரணங்கள் என்றுணர்ந்தார். அத்துடன், மாட்டிறைச்சியும், மதுவும் அருந்தும் மக்களின் ஆன்மீக குருவாக மட்டும் பார்க்கப்பட்டார் என்பதும் கிறிஸ்தவம் வேரூன்றாததற்கான காரணங்கள் எனக் கண்டறிந்தார். எனவே, முதலில் தன் வாழ்க்கை முறைகளை மாற்றினார். காவியுடை உடுத்தி சந்நியாசியானார். குடுமியும், நெற்றியில் சந்தனப் பொட்டும், காலில் மர காலணியும் அணிந்து கொண்டார். சைவ உணவை நாளில் ஒரு பொழுது மட்டும் உண்டார். இவ்வாறாக, தன்னை முழுவதுமாக ஒரு இந்திய சந்நியாசி என்று காட்டிக் கொண்டு, நற்செய்தியை அறிவிக்கத் தொடங்கினார். இவருடைய இம்முறைக்கு பலத்த எதிர்ப்புக்கள் தோன்றின. இறுதியாக, ஒரு காலக்கட்டத்தில் நோபிலிக்கு தடையும் விதிக்கப்பட்டது.

முதல் வாசக முன்னுரை

இறையழைத்தல் என்பது சமுதாயத்தில் ஒரு நபருக்கு இருக்கக்கூடிய தகுதியையும், கௌரவத்தையும் பொறுத்து அல்ல, மாறாக இறைவனின் விருப்பத்தையும், பேரிரக்கத்தையும் பொறுத்தது. எனவே தான் எசாயா தன்னைத் தகுதியற்றவரென இறைவனிடம் உரைத்தபோதும் இறைவன் அவரைத் தூய்மைப்படுத்தி தகுதியுள்ளவராக்குகிறார். இறைவாக்கினர் எசாயாவும் இறைப்பணிக்கு தன்னையே முழுமையாக அர்ப்பணிக்கும் அந்நிகழ்வை இவ்வாசகத்தில் வாசிக்கக் கேட்போம்.

இரண்டாம் வாசக முன்னுரை

கிறிஸ்தவர்களைக் கொன்று குவிப்பதற்காகத் தமஸ்கு நகருக்குச் சென்று கொண்டிருந்த சவுலை உயிர்த்த இயேசு தன் பணிக்கென அழைத்தார். அவரும் இன்றைய வாசகத்தில் தனது தகுதியின்மையை எடுத்துரைக்கிறார். எனவேதான், திருத்தூதர்களிலெல்லாம் கடையனாகத் தன்னை வெளிப்படுத்துகிறார். இறைவனின் அருளும் ஆசியும் எத்தகையவரையும் மாற்றம் பெற வைக்கிறது. இறைப்பணிக்கென அவர்களைத் தகுதி படைத்தவராகவும் மாற்றுகிறது என்கின்ற உண்மையை வெளிப்படுத்தும் இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

மன்றாட்டுக்கள்

1. அன்பே உருவான இறைவா! உம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் இருபால் துறவியர்கள் தங்களது இறையழைத்தலில் நிலைத்து நின்று அழைத்த உமது விருப்பத்தை முழுமையாக தங்கள் வாழ்வில் செயல்படுத்தத் தேவையான இறைஞானத்தையும் இறையருளையும் அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. எங்களையெல்லாம் படைத்து பராமரிக்கும் இறைவா! உமது இறைப்பணிக்கென சாதாரண மனிதர்களை திருமுழுக்கினால் புதுப்படைப்பாக மாற்றினீர். நாங்களும் எங்களது தகுதியின்மையை உணர்ந்து, உமது அருளில் நம்பிக்கைக் கொண்டு உமக்கு உரியவர்களாக வாழ எங்களுக்கு துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. உம் ஆவியால் எங்களுக்கு புத்துயிர் அளிக்கும் இறைவா! இறைவாக்கினர் எசாயா, பவுல் மற்றும் பேதுருவைப் போல நாங்களும் எங்களது தனிப்பட்ட பாவங்களையும், பாவச் சூழ்நிலைகளையும் தாழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு மனமாற்றம் பெற்று உம்மில் வாழ எங்களுக்கு அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. இறையழைத்தலின் பிறப்பிடமே இறைவா! இறை அழைத்தலின் அத்தியாவசியத்தையும் அவற்றின் மேன்மையையும் கிறிஸ்தவ குடும்பங்கள் அனைத்தும் உணர்ந்தருளவும் குறிப்பாக இன்றைய இளம் தலைமுறையினர் உணர்ந்து இறைபணிக்கெனத் தங்களையும், தங்களது பிள்ளைகளையும் அர்ப்பணிக்கக்கூடிய மனநிலையை தூய ஆவியாரின் வழியாக தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

அனைத்துப் பண்புகளையும் கொண்டு வாழ துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. 'அறுவடையோ மிகுதி, வேலையாட்களோ குறைவு' என்ற கூறிய அழைத்தலின் நாயகனே எம் இறைவா! திருஅவையில் இறையழைத்தல் பெருகவும், அழைப்பில் இருப்பவர்கள் அனைவரும் பிரமானிக்கத்தோடு வாழவும் அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

பொதுக்காலம் 5 ஆம் ஞாயிறு (06-02-2022)

எசா 6:1-8; 1கொரி 15:1-11; லூக் 5:1-11

திருப்பலி முன்னுரை

அழைப்பு என்பது ஓர் ஆன்மீகத்தின் ஆணிவேர். இந்த ஆணிவேர்தான் இன்று திருஅவையைக் கட்டிக்காக்கக் கூடிய பக்க வேர்களாக ஆயர்களையும், குருக்களையும், துறவிகளையும் மற்றும் பொதுநிலையினரையும் உருவாக்கித் தந்திருக்கின்ற மாபெரும் சக்தியாக விளங்குகிறது. இறையழைத்தல் என்பது எதிர்பாராத ஒரு நிகழ்வு. இறையழைத்தலானது இறைவிருப்பத்துடன் எவர் வேண்டுமானாலும் பெறக்கூடிய ஓர் அழைப்பு. ஏழை, எளியவர், உயர்ந்தவர், தாழ்ந்தவர், படித்தவர், பாமரர் என இறைவன் ஆள் பார்த்து, பாரபட்சம் காட்டி செயல்படுவதில்லை. இறைவிருப்பத்தை நாடும் ஒவ்வொருவரையும் இறைவன் அழைக்கிறார். தகுதியற்றவர்களை அடையாளம் கண்டு தகுதியானவர்களாக மாற்றுகின்றார். எனவேதான் திக்குவாயான மோசேயும், ஒழுங்குமுறைத் தவறிய தாவீதும் கூட இறையழைத்தலுக்கு தகுதியாளராயினர்.

இறை விருப்பமே இறை அழைத்தலாகிறது. 'எனவேதான் நீங்கள் என்னைத் தேர்ந்துகொள்ளவில்லை மாறாக, நான் தான் உங்களைத் தேர்ந்துகொண்டேன்' என்று இயேசு கூறுகிறர். இறைவன் யாரைத் தேர்வு செய்தாரோ அவர்களை தகுதியுள்ளவர்களாக மாற்றுகின்றார். தூய்மையற்ற உதடுகளைக் கொண்ட மனிதன் நான் என்று சொன்ன எசாயாவை, பாபிலோனில் அடிமையாக இருந்து இஸ்ராயேல் மக்களுக்கு விடுதலை செய்தியை அறிவிக்க அனுப்புகிறார். திருத்தூதர் என அழைக்கப்பெறத் தகுதியற்றவன் என்று சொன்ன புனித பவுலை புறவினத்தாரின் திருத்தூதராக அனுப்புகிறார். ஆண்டவரே, நான் பாவி என்று சொன்ன பேதுருவை மனிதர்களை பிடிப்பவர்களாக மாற்றினார். ஆக, எல்லாம் இறைவிருப்பத்தினால் நடைபெறுகிறது. எனவே நாமும் இறைவிருப்பத்தை அறிந்து இறைவனது அழைப்புக்கு உட்பட்டு வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

இக்காலக்கட்டத்தில் தழிழ், சமஸ்கிருதம் மற்றும் தெலுங்கு மொழிகளை கற்றுத் தேர்ந்தார். பல மைல்கள் நடந்து சென்று தமது முறை நல்ல பலன்களை தரும் என்று ஆயர்களுக்கும், தன் சபையைச் சார்ந்தோருக்கும் எடுத்தரைத்தார். இறுதியாக, கி.பி. 1621ஆம் ஆண்டு பெப்ரவரி 23ஆம் தேதி லிஸ்பன் நோபிலியின் முறையை சரியென்று ஏற்றுக்கொண்டது. கி.பி. 1623ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் தேதி திருத்தந்தை 15ஆம் கிரகோரி நோபிலியின் முறையை அங்கீகரித்தார். இங்ஙனம், புத்துயிர் பெற்ற நோபிலியின் பணியானது வேகமாக வளரலாயிற்று. மறைபணியாளர்கள் சந்நியாசி சாமிகள், பண்டார சாமிகள் எனப்பிரிக்கப்பட்டு அனைத்து இன மக்களுக்கும் பணியாற்றத் தொடங்கினர். அனைத்து இன மக்களும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தனர். இவ்வாறு, மதுரையை தலைமையிடமாகக் கொண்ட மதுரை மறை பணித்தளம் உருவானது. இவ்வரலாறு மிக நீண்டதும், சிக்கலானதும் கூட. நம் கட்டுரைக்கு முன்னோட்டமாக மட்டும் இதை தருகிறேன். இக்காலக்கட்டத்தில் மதுரையில் பனிமய மாதாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆலயம் ஒன்று இருந்ததாக சான்றுகள் கூறுகின்றன. (காண். L. Besse, S.J., The Madurai Mission, p. 254.)

நீண்டதொரு வரலாற்றில் இயேசு சபை தடைசெய்யப்பட்டதும், மீண்டும் திருஅவையின் பணிக்காக அங்கீகரிக்கப்பட்டதும் நம் வாசகர்கள் நன்கு அறிந்ததே. இயேசு சபை மீண்டும் அங்கீகரிக்கப்பட்டப் பிறகு, பிரான்சு நாட்டைச் சார்ந்த இயேசு சபை குருக்கள் நால்வர் இந்தியாவிற்கு முதலில் வந்தனர். அவர்களில் அருட்பணி. ஜோசப் பெட்ரான்டு மற்றும் அருட்பணி. லூயிஸ் கார்னியர் மதுரை வந்தடைந்தனர். இயேசு சபை தடைசெய்யப்பட்டிருந்த காலக்கட்டங்களில் கோவாவை சார்ந்த குருக்களும் மதுரை பணித்தளத்தில் பணிபுரிந்து வந்தனர். கோவா குருவால் ஏற்றுக் கொள்ளப்படாத இயேசு சபை அருட்பணியாளர்கள் பலவித அவமானங்களைத் தாங்க வேண்டியதாயிருந்தது. அச்சமயத்தில், பாளையங்கோட்டை பணித்தளத்திற்கு செல்வதற்காக மதுரை வந்த மற்ற இரு இயேசு சபை அருட்பணியாளர்கள் அலெக்ஸாண்டர் மார்டின் மற்றும் லூயிஸ் தெ ரான்கெட்டும், அருட்பணியாளர்களின் துன்பத்தில் பங்கேற்றனர். இக்காலக்கட்டத்தில் மதுரை ஆட்சியராக விளங்கிய ஆங்கிலேயரும் இயேசு சபை அருட்பணியாளர்களுக்கு சாதகமான முடிவுகளை எடுக்கவில்லை. எனவே, அருட்பணியாளர்கள் பெட்ரான்டு மற்றும் கார்னியர் கல்லடித்திடல் சென்று தமிழ் மொழியை செவ்வனே கற்க ஆரம்பித்தனர். கி.பி. 1840ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் தேதி இந்த நான்கு அருட்பணியாளர்களும் பள்ளித்தம்பத்தில் கூடி பேசி மதுரை பணித்தளத்திற்கு புத்துயிர் அளிப்பதற்கான திட்டங்களைத் தீட்டினர். இவ்வாறாக, தன்னலம் கருதாத இப்பணியாளர்களின் பெருமுயற்சியால் மதுரை பணித்தளம் புத்துயிர் பெறுவதற்கான நம்பிக்கைக் கீற்றுகள் தோன்ற ஆரம்பித்தன.

மதுரை பணித்தளத்தின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட அருட்பணி. ஜோசப் பெட்ரான்டு அவர்கள் முதலில் தங்கள் பணித்தளத்திற்கான இடத்தை 600 ரூபாய்க்கு வாங்கினார். அவ்விடத்தில்தான் தற்போதைய ஆலயம், குருக்கள் இல்லம் மற்றும் பள்ளியானது அமைந்துள்ளது. இந்த இடத்தை சுற்றி பல்வேறு சிரமங்களுக்கிடையில் சுற்றுச் சுவரானது அமைக்கப்பட்டது. இக்காலக்கட்டத்தில் அருட்பணியாளர்களுக்கு தொல்லை தந்து கொண்டிருந்த கோவா குரு போர்சேஸ் அவர்களின் திட்டங்கள் பலன் அளிக்காமல் தோல்வியுடன் திரும்பினார்.

திருச்சியில் ஆலயம் கட்டுவதில் தனக்கு இருந்த அனுபவத்தை வைத்து அருட்பணி. லூயிஸ் கார்னியர், மதுரை வந்து எட்டு நாட்கள் தங்கியிருந்து ஆலயம் மற்றும் குருக்கள் இல்லத்திற்கான அஸ்திவாரங்களை அமைத்தார். அதன்பின், அருட்பணி. பெட்ரான்டு பணிகளை தொடர்ந்தார். இறுதிக்கட்ட பணிகளுக்காக மீண்டும் அருட்பணி. கார்னியர் மதுரை வந்து கி.பி 1841ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பணிகளை நிறைவு செய்தார். இந்த ஆலயமானது திருச்சி பேராலயத்தின் மாதிரியாகக் கொண்டு 32 அடி அகலம் கொண்ட சிறிய ஆலயமாகவும், இலத்தீன் சிலுவை வடிவத்திலும் கட்டப்பட்டது. புதிய ஆலயமானது வியாகுல அன்னையின் நாமம் தாங்கியதாக விளங்கியது.

திருச்சி மற்றும் மதுரையில் அன்னையின் நாமம் விளங்க ஆலயம் எழுப்பிய அருட்பணி. லூயிஸ் கார்னியர் திடீரென நோய்வாய்ப்பட்டு கி.பி. 1843ஆம் ஆண்டு ஜீலை 5ஆம் நாள் மதுரையில் இறைவனடிச் சேர்ந்து அடக்கம் செய்யப்பட்டார். மதுரையிலிருந்து அவருடைய புனித உடலானது கி.பி. 1845ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் தேதி திருச்சி பேராலய கல்லறைத் தோட்டத்தில் மீண்டும் அடக்கம் செய்யப்பட்டது.

அருட்பணி. ஜான் திரிங்கால் அவர்களின் காலத்தை மதுரையின் பொற்காலம் எனக்கூறலாம். இவர் காலத்தில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 600லிருந்து 2500 ஆக உயர்ந்தது. மேலும், கி.பி. 1856ல் அருட்பணி. திரிங்கால் அவர்களால் 60 மாணவர்களுடன் பள்ளியானது தொடங்கப்பட்டது. இப்பள்ளிதான், இன்று புகழ் பெற்று விளங்கும் புனித மரியன்னை மேல்நிலைப் பள்ளியாகும். இவருடைய காலத்தில், கி.பி. 1857 முதல் கோவில் திருவிழா பவனி ஆரம்பமாயிற்று.

அருட்பணி. ஹிப்போலைட் பிளாங்க் (1879-1885) மற்றும் அருட்சகோதரர் லமோதே அவர்களின் பெருமுயற்சியால் ஆலயமானது விரிவாக்கப்பட்டது. மேலும், உரோமை கட்டிடக்கலை நுணுக்கங்களுடன் இரண்டு உயரமான மணிக்கோபுரங்கள் கட்டப்பட்டன.

கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவே அனைவரும் ஆலய வழிபாடுகளில் பங்கேற்கும் வகையில் புதிய ஆலயமானது கட்ட முடிவெடுக்கப்பட்டது. கி.பி. 1912ஆம் ஆண்டு, வியாகுல அன்னையின் விழாவான, **மார்ச் 29ஆம்** தேதி பணிகள் ஆரம்பமாயின. கி.பி. 1914ல் முதல் உலகப்போர் தொடங்கிய சூழலில் ஐரோப்பாவிலிருந்து உதவிகள் தடைபட்டன. ஆரம்பித்த பணிகளை நிறைவு செய்ய, ஒரு பகுதி நிலமானது விற்கப்பட்டு, ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது. புதிய ஆலயமானது திருச்சி ஆயர் மேதகு. அகுஸ்தின் பெசாந்தியர் அவர்களால் கி.பி. 1916ஆம் ஆண்டு

அதை அனுபவிக்கிறான். இவ்வாறு தாம் பெற்ற அனுபவத்தை பிறரோடு பகிர்ந்து வாழ முற்படுவதன் அடையாளமே கிறிஸ்தவர்களின் நம்பிக்கை அறிக்கை. அழைக்கப்பட்டவர்கள் எந்நிலையில் இருந்தாலும் இறைவனுடன் இணைந்திருந்தால் மட்டுமே தங்களது அழைப்பின் மேன்மையை உணர்ந்து அதற்கேற்ப வாழ முடியும். இதை உணர்ந்தவர்களாக இறையனுபவம் பெற்று இறையழைத்தலில் முழுமையை அடைய வேண்டுவோம் இத்தியாக திருப்பலியில்.

முதல் வாசக முன்னுரை

இன்றைய முதல் வாசகம் இறைவாக்கினர் எரேமியாவின் அழைப்பைப் பற்றிப் பேசுகின்றது. சாதாரண மனிதராக இருந்த இவர் இறைவனால் தொடப்பட்டு புனிதப்படுத்தப்படுகிறார். பின்பு இறைவாக்கு எடுத்துரைக்கும் கருவியாக மாறுகின்றார். இறைவாக்கினர்களாக வாழ இறைவனிடமிருந்து இன்றும் அழைப்பு வருகிறது. திருமுழுக்கு என்னும் அருள் அடையாளத்தின் வழியாக நாம் அனைவருமே இறைவாக்குரைக்கும் இறைவாக்கினர்களாகியிருக்கிறோம். இறைவனால் நாம் செதுக்கப்படவும், அவரை நம் வாழ்வில் தினம் தினம் அனுபவிக்கவும், பெற்ற இறையனுபவத்தை மற்றவர்களோடு பகிரவும், இப்பணியில் நமது தகுதியின்மையை உணர்ந்து இறைவனோடு இணைந்து பணி செய்ய ஆற்றல்மிக்க ஊழியர்களாக மாறிட வரம் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

இரண்டாம் வாசக முன்னுரை

பல்வேறு வரங்களைப் பற்றி கடந்த இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளில் கூறிய புனித பவுல் இவற்றுள் தலைசிறந்த வரமாகிய அன்பின் பண்பினைப் பல்வேறு கோணங்களில் விளக்குகிறார். ஆவியின் அருட்கொடைகள் மூன்று: பரவசப் பேச்சு, இறைவாக்குரைத்தல், பிறர்நலப் பணி. முதல் இரண்டும் தற்காலிகமானவை, ஆனால் இவ்வுலகில் நமக்கு நிலையாக அளிக்கப்படுபவை: விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகிய அருட்கொடைகளேயாகும். இவற்றுள் தலைசிறந்தது அன்பே என்று விளக்கும் இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

மன்றாட்டுக்கள்

1. படைப்பின் நாயகனே எம் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உமது அழைப்பின் மேன்மையை உணர்ந்து தாங்கள் அழைக்கப்பட்ட நிலையிலிருந்தே உமக்கு சாட்சிய வாழ்க்கை வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. இரக்கத்தின் இறைவா! திருமுழுக்கின் வழியாக இறைவாக்கினர்களாக வாழ அழைக்கப்பட்ட நாங்கள் அனைவரும் நீதி நியாயம் நிறைந்த சமத்துவ உலகைக் கண்முன் கொண்டு அதை உருவாக்கும் பணியில் ஈடுபட துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. கருணையின் ஊற்றே இறைவா! எங்களிடையே இருக்கும் இருமாப்பு, பொறாமை, கட்சி மனப்பான்மை இவற்றை உதறித் தள்ளிவிட்டு அன்பின்

2. வார்த்தை மனுவான இறைவா! கிறிஸ்தவர்களாகிய நாங்கள் அனைவரும் உம் வார்த்தையை தினமும் வாசித்து, அதை தியானித்து, அதன்படி எங்களது வாழ்க்கையை செயல்படுத்த உமது ஞானத்தையும் அருளையும் நிறைவாகப் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. வரங்களைப் பொழியும் வள்ளலே எம் இறைவா! திருப்பலியில் பங்கேற்கும் இறைமக்களாகிய நாங்கள் அனைவரும் நற்கருணை வழிபாட்டுக்கு கொடுக்கும் அதே முக்கியத்துவத்தை இறைவார்த்தை வழிபாட்டுக்கும் கொடுத்து இதனால் எங்கள் வாழ்க்கை உமது வார்த்தையை அடித்தளமாகக் கொண்டு உமது அருளையும் ஆசியையும் அனுதினமும் அனுபவிக்கத் தேவையான அருள்வரங்களைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. ஞானத்தின் ஊற்றே எம் இறைவா! 'உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்' என்ற அன்னை மரியாவைப் போல நாங்களும் எங்கள் வாழ்வில் வருகின்ற ஒவ்வொரு நிகழ்வையும் உமது இறைத்திட்டமாக ஏற்று வாழத் தேவையான அருளைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

பொதுக்காலம் 4 ஆம் ஞாயிறு (30-01-2022)

எரே 1:4-5, 17-19; 1கொரி 12:31-13:13; லூக் 4:21-30

திருப்பலி முன்னுரை

மீட்புப் பணிக்கான ஒவ்வொரு அழைப்பும் இறைவனின் நித்தியத் திட்டத்தில் இடம் பெறுகிறது. 'உன் தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கும் முன்பே உன்னை நான் அறிந்திருந்தேன்; நீ பிறக்கும் முன்பே உன்னை திருநிலைப்படுத்தினேன்; மக்களினங்களுக்கு இறைவாக்கினனாக உன்னை நான் ஏற்படுத்தினேன்.' இத்தகைய பொறுப்புள்ள இறைவனின் பணிக்கு தான் தகுதியற்றவன் என்பதை இறைவாக்கினர் எரேமியா கூறுகிறார். மோசே தன் தகுதியின்மையையும், எசாயா தன் பாவ நிலையையும், கிதியோன் தன் தாழ்ந்த இனத்தையும், மரியா தன் கன்னிமைத்தன்மையையும் கூறி ஆண்டவரது அழைப்பை ஏற்கத் தயங்கினர். ஆண்டவரின் அழைப்புக்கு யாரும் தகுதியுடையவர் அல்ல, எனினும் எவரொருவர் தன் வலுவின்மையை ஏற்று இறைவன் அருள் எனக்குண்டு என்பதில் நம்பிக்கை வைத்து செயல்படுகின்றாரோ அவர் தன் அழைத்தல் வாழ்வில் நிலைத்திருப்பார் என்ற உண்மையை உணர்த்துகிறது இன்றைய வழிபாடு. இறைவனால் அழைக்கப்பட்ட மனிதன் ஒரு காலக்கட்டத்தில் இறையனுபவம் பெறுகிறான். இறைவனின் பிரசன்னத்தை தன் வாழ்வில் உணர்ந்து

ஆகஸ்டு 15ஆம் நாள் அர்ச்சிக்கப்பட்டது. இப்பணிகளானது, அருட்பணி. பிளாஞ்ச் அவர்களால் திருச்சி புனித வளனார் கல்லூரி கட்டிடங்களைக் கட்டிய திருவாளர் சவரிமுத்து அவர்களின் துணையோடு நிறைவேற்றப்பட்டது. பின்னாளில், அருட்பணி. ஜோலி அவர்களால் கோவிலின் தரையும், 9000 பிராங்குகள் மதிப்புள்ள ஆலய மணியும் அமைக்கப்பட்டன.

கி.பி. 1938ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் தேதி திருச்சியிலிருந்து பிரிக்கப்பட்டு மதுரை மறைமாவட்டம் உதயமான போது, ஆயர் பீட்டர் லியோனார்டு அவர்கள் மரியன்னை ஆலயத்தை மறைமாவட்ட இணைப் பேராலயமாக அறிவித்தார். கி.பி. 1953ஆம் ஆண்டு செப்டம்பர் 19ம் தேதி மதுரை உயர் மறைமாவட்டமானது. பின்னாளில், பேராயர் ஜஸ்டின் திரவியம் அவர்களால் வியாகுல அன்னை ஆலயமானது மறைமாவட்ட பேராலயமாக அறிவிக்கப்பட்டது.

கி.பி. 1963ல் அருட்பணி. X.M. அடைக்கலம் பங்கு பணியாளராக இருந்த போது முன்பே முடிவு செய்யப்பட்ட பெரியதோர் ஆலயமானது கோதிக் கட்டிட கலை வடிவத்தில் கட்ட முடிவெடுக்கப்பட்டது. இப்பணியில் அருட்பணி. அடைக்கலம் அவர்களோடு அருட்பணியாளர்கள் K.S. அருளானந்தம் மற்றும் T.M. மதாய் இணைந்து பணியாற்றி வானுயர்ந்து நிற்கும் கண்கவர் பேராலயப் பணிகளை நிறைவு செய்தனர்.

முழுமையாக கட்டி முடிக்கப்பட்ட இக்கோவிலானது ஹீப்ரு, கிரேக்கம், ரோமன், கோதிக், ஜெர்மன், வெனிஸ், ஸ்பெயின் மற்றும் மொனாட்டிக் கட்டிடக்கலை அம்சங்களை உள்ளடக்கியதாக உள்ளது. கலையழகு மிகுந்த இத்தேவாலய கூரையானது, மேற்கூரை மற்றும் கீழ்க்கூரை என இருதளங்களைக் கொண்டது. அவற்றை 56 உள் வளைவுகளும், 336 அரை வளைவுகளும் தாங்கி நிற்கின்றன. ஹீப்ரு கலையைப் பின்பற்றி கிரேக்க டார்க் தூண்கள், ரோமன் தூண்கள், கோத்திக் தூண்கள் என மூன்று வகைகள் இணைந்த 200 தூண்கள் இக்கோயிலைத் தாங்கி நிற்கின்றன. லத்தீன் சிலுவை வடிவில் அமைக்கப்பட்ட இக்கோவில் 9 சிலுவை வடிவங்களை உள்ளடக்கியது. பல நிறக்கண்ணாடிகள் பொருத்தப்பட்ட 80 ஜன்னல்களும், 4 அழகிய ரோஸ் கண்ணாடி ஜன்னல்களும் இங்கு உள்ளன.

கோவிலின் கோபுரங்கள் ஜெர்மன் ஸ்டீபில் கோபுரங்களாகும். அவற்றிற்குள் KINGS BOLD என்று அழைக்கப்படும் ரஷ்ய வகையைச் சார்ந்த இரண்டு மணிகள் பொருத்தப்பட்டுள்ளன. லியோனாட்டோ டாவின்சியின் கடைசி இரவு உணவு சுரூபம், மைக்கில் ஆஞ்சலோவின் பியட்டா, ரபேல் என்பவரின் மடோனா, ஜியோவான் பெல்லியின் உத்தரிய மாதா சுரூபங்களின் மாதிரிகள் ஆலயத்தின் அழகையும், அருளையும் கூட்டுகின்றன.

ஆலயத்திற்கு வெளியே இடது புறம் வியாகுல அன்னையின் கெபியானது அன்னையின் ஏழு வியாகுலங்களையும் தியானிக்கும் வகையில் கட்டப்பட்டுள்ளது. பல்வேறு துன்பங்களுடன் அன்னையின் அரவணைப்பை நாடிவரும் அனைவருக்கும் ஆறுதல் தருகிற ஆன்மீக இடமாக இக்கெபி அமைந்துள்ளது. கெபியின் நடுநாயகமாக இருக்கும், மகனின் உடலை மடியில் தாங்கியிருக்கும் அன்னையின் திருஉருவமானது நம் கண்களை குளமாக்குகிறது. ஆலயத்தின் மையப்பீடத்திற்கு மேல் வியாகுல அன்னையின் திருஉருவமானது வைக்கப்பட்டுள்ளது.

நம் விசுவாத்தின் முன்னோடியாக விளங்கும் இக்கோவிலில் வீற்றிருந்து, தம் திருமகனிடம் நமக்காகப் பரிந்துபேசும் வியாகுல அன்னையிடம் நம்மை ஒப்படைப்போம்.

இக்கட்டுரைக்குத் தேவையான தகவல்களையும், அச்சுப்பிரதிகளையும் வழங்க அனுமதி வழங்கிய புனித மரியன்னை பேராலய பங்குத் தந்தை அருட்பணி. மரியநாதன் சே.ச அவர்களுக்கும், பிரதிகளை வழங்கி, அன்புடன் பல செய்திகளை தந்து உதவிய உதவி பங்குத் தந்தையர்கள் அருட்பணி. மனுவேல் சே.ச மற்றும் அருட்பணி. விஜின் சே.ச அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

திருப்பயணம் தொடரும்....

ஒரு சட்டப் புத்தகமாக வாசிக்கின்றோம். ஆனால், அதற்கு மாறாக இறைவன் தன்னையே வார்த்தை வழியாக வெளிப்படுத்தும் ஒரு கருவியாக விவிலியத்தைப் பார்க்க நாம் அழைக்கப்படுகிறோம். இறைவார்த்தைக்கு நாம் செவிகொடுக்கும் போது இறைவனின் குரலைக் கேட்கிறோம். எனவே இறைவனின் பிரசன்னத்தை தம்மில் முழுமையாக தாங்கி வரும் இறைவார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்து அதை வாசிக்கும்போதும் கேட்கும் போதும் கடவுளின் பிரசன்னத்தையும் அவரது உண்மை இயல்பையும் உணர்ந்து வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

முதல் வாசக முன்னுரை

பாபிலோனிய அடிமை வாழ்வுக்குப்பின் எருசலேம் வந்த மக்கள் அழிந்த ஆலயத்தை நெகேமியா தலைமையில் மீண்டும் கட்டியெழுப்பினர். எஸ்ரா என்னும் திருச்சட்ட வல்லுநர் எழுந்து இறைவார்த்தையை வாசித்தார். திருச்சட்ட நூல் வேதவாக்கு ஆனதால் அதற்கு தக்க வணக்கம் செலுத்தப்படுகிறது. நாமும் வார்த்தை வழிபாட்டில் பக்தியுடன் பங்கெடுக்க வேண்டுமானால் வேத ஏடுகள், தேவ ஏடுகள் இறைவனின் வார்த்தைகளைக் கொண்ட ஏடுகள் என்ற விசுவாசம் தேவை. இவ்விசுவாசத்தில் வளர்ந்திட இறையருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

இரண்டாம் வாசக முன்னுரை

அருட்கொடைகள் வெளிப்படும் வகையிலும் அவற்றின் செயல்முறையிலும் வேறுபாடுகள் இருந்தாலும் அனைத்து வரங்களும் ஒரே தெய்வீக ஊற்றிலிருந்தே பிறக்கின்றன. திருஅவையின் பொது நன்மைக்காகவே இவை அளிக்கப்படுகின்றன என்பதை புனித பவுல் உடலின் உவமை வழியாகத் தெளிவுபடுத்துகிறார். நமது தலையுடன் ஏனைய உறுப்புக்கள் பொருந்தி ஒரே உயிரைப் பெற்று வாழ்வது போலவே, நாமும் கிறிஸ்துவை தலையாகக் கொண்ட திருஅவை என்ற உடலின் உறுப்புகளாக இருக்கிறோம் என்ற உண்மையை உணர்த்தும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

மன்றாட்டுக்கள்

1. வழிகாட்டும் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் கிறிஸ்துவை தலையாகக் கொண்டு திருஅவை எனும் உடலின் உறுப்புகளாக இருக்கிறோம் என்பதை உணர்ந்து திருஅவையின் நன்மைக்காகவும், வளர்ச்சிக்காகவும் இணைந்து செயல்பட துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

மன்றாட்டுக்கள்

1. திருஅவையை வழிநடத்தும் ஆயனே எம் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவரும் தூய ஆவியாரின் வழிகாட்டுதலால் தாங்கள் உம்மிடம் பெற்றுக்கொண்ட கொடைகளை திருஅவையின் நலனுக்காகவும் அதன் வளர்ச்சிக்காகவும் பயன்படுத்தத் தேவையான இறைஞானத்தைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா! எம் நாட்டை ஆளும் தலைவர்கள் அனைவரும் தன்னலம் துறந்து பிறர்நலனில் அக்கறை கொண்டு வாழவும், ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்திற்காக தங்கள் வாழ்வை அர்ப்பணித்து சேவை புரியும் நல் மனதை அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. ஒற்றுமையின் பிறப்பிடமே எம் இறைவா! பல்வேறு காரணங்களால் பிரிந்திருக்கின்ற குடும்பங்கள் அனைத்தும் உமது பிரசன்னத்தாலும், உம் அன்னையின் பரிந்துரையாலும், அக்குடும்பங்கள் அமைதியுடனும் சமாதானத்துடனும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு விட்டுக்கொடுத்து வாழும் நல் மனதை அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. தியாகத்தின் ஊற்றே இறைவா! எங்கள் பங்கு மக்களையும் பங்கு குருவையும் ஆசீர்வதித்து நாங்கள் அனைவரும் மேற்கொள்கின்ற முயற்சியில் வெற்றியையும் நாங்கள் ஒருவருர் மற்றவர் வளர்ச்சிக்கு எங்களால் இயன்ற உதவியையும் தியாகத்தையும் மேற்கொள்ள எங்கள் மனதை உமது வரங்களால் நிரப்பியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

பொதுக்காலம் 3 ஆம் ஞாயிறு (23-01-2022)
நெகே 8:2-6, 8-10; 1கொரி 12:12-30; லூக் 1:1-4, 4:14-21

திருப்பலி முன்னுரை

காலங்களையெல்லாம் கடந்து வந்திருக்கும் கடவுளின் வார்த்தை வரலாற்றில் அளப்பறிய மாற்றங்கள் செய்திருப்பதை யாரும் மறுக்க முடியாது. 'மனித குலத்திற்கு கடவுள் வழங்கியுள்ள கொடைகளில் மிகச்சிறந்த கொடை விவிலியமே' என்கிறார் ஆபிரகாம் லிங்கன். இன்றைய வழிபாடு இறைவார்த்தையின் தன்மையையும் அதன் முக்கியத்துவத்தையும் பற்றி சிந்திக்க நமக்கு அழைப்பு விடுக்கின்றது. நமது அன்றாட வாழ்வில் பேசப்படும் வார்த்தைகள், பேசுபவரின் தன்மையையும் அவரது இயல்பையும் வெளிப்படுத்துகின்றன. 'உள்ளத்தின் நிறைவே வாய் பேசும்' என்பதற்கிணங்க ஒருவர் உச்சரிக்கும் வார்த்தைக்கும் அவரது இயல்புக்கும் தொடர்பு உண்டு. எனவே விவிலியத்தில் இருக்கும் இறைவார்த்தைகள் இறைவனது இயல்பையும் அவரது தன்மையையும் நமக்கு வெளிப்படுத்தும் கருவிகளாக உள்ளன. கடவுள் யாரென்ற உண்மையை நமக்கு வெளிப்படுத்துவது இறைவார்த்தை. விவிலியத்தை பல நேரங்களில் நாம்

புத்தாண்டு வேண்டுதல்

கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

அன்புள்ளம் கொண்ட அம்மாவுக்கு
ஆசையாய் மகனின் கடிதம்
யாரும் இங்கே நலம் இல்லை
நாடு கூட சுகம் இல்லை
கொரோனா இன்னும் ஒழிய வில்லை – அவன்
கொடூர முகமும் தணிய வில்லை
உயிர் பலிகள் குறைய வில்லை
துயர் பழிகள் மறைய வில்லை
எம் பிழைதான் மறுக்க வில்லை
உம் தயைநான் நினைக்க வில்லை
நம்பிக்கை இழந்து விட்டேன் - பாவ
எண்ணிக்கை மிகுந்து விட்டேன்
மன சாட்சியை தொலைத்து விட்டேன்
மனப் போக்கிலே நிலைத்து விட்டேன்
நன்மை புரிந்திட மறுத்து விட்டேன்
நன்றி புரிந்ததை மறந்து விட்டேன்
உழைத்து வாழ சலித்துக் கொண்டேன் - பிறர்
உழைப்பில் வாழ கணித்துக் கொண்டேன்
கருணை உள்ளம் கொண்ட அம்மா – என்னை
கனிவு கொண்டு பாரும் அம்மா
கொரோனா என்னும் கொடூரத்தை
உடனடியாய் நிறுத்தும் அம்மா!
ஈராயிரத் திருபத் திரண்டை
இனிமையாய்த் தாரும் அம்மா!
இருண்ட எம் வாழ்க்கை இனியும்
ஒளிர்ந்த தாய் மாற்றும் அம்மா!
இயேசு சூசை உம்மைப் போல – புவி
பேசும் படி ஏற்றும் அம்மா!
இயேசு பிரான் இவற்றை எல்லாம்
செய்யும் படி இறைஞ்சும் அம்மா!

விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி

செக்காரியா

ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21



இடமிருந்து வலம்

1. பகும் செடிகள் இடையே நின்று கொண்டிருந்த அவர் மறுமொழியாக 'இவை ---------- சுற்றி வரும்படி ஆண்டவரால் அனுப்பப்பட்டவர்களைக் குறிக்கின்றன' என்றார்.
3. பொய்யாணை ---------- எவனும் தண்டனைக்குத் தப்பவே மாட்டான்.
5. 'படைகளின் ஆண்டவர் கூறுவது இதுவே: நேர்மையுடன் நீதி வழங்குங்கள் ---------- அன்பும் கருணையும் காட்டுங்கள்.
6. இதோ என் தலைவர் அவற்றைப் பறிமுதல் செய்வார் அதன் அரணைக் கடலுக்குள் தூக்கி எறிவார் ---------- நெருப்புக்கு இரையாகும்.
7. அவர்கள் ---------- குரல் கேட்கின்றது. ஏனெனில் அவர்களின் மேன்மை பாழ்படுத்தப்பட்டது.

மேலிருந்து கிழ்

1. 'ஏனெனில் அதைச் சுற்றிலும் நானே நெருப்புச் சுவராய் அமைவேன் அதனுள் ---------- மாட்சியாய் விளங்குவேன்' என்கிறார் ஆண்டவர்.
2. உன்னைப் பொறுத்தமட்டில் உன்னோடு நான் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை முன்னிட்டு சிறைப்பட்டிருக்கும் உன்னைச் ---------- நீரற்ற படுகுழியிலிருந்து விடுவிப்பேன்.

தரும் இறையருள் நிறைந்த புதிய வாழ்வை நாம் பெற்றுக்கொள்ள முடியும். இறைவன் எப்பொழுதெல்லாம் புதிய வாழ்வை வழங்குகிறாரோ அப்பொழுதெல்லாம் புதிய பெயரைத் தருகிறார். உதாரணமாக ஆபிராம் - ஆபிரகாம், யாக்கோபு - இஸ்ராயேல், சீமோன் - பேதுரு, சவுல் - பவுல். இன்றைய நற்செய்தி வாசகமும் இயேசு கொண்டுவந்த புதிய வாழ்வைப் பற்றியே பேசுகிறது. பழைய இரசத்தைவிட புதிய இரசம் சுவைமிக்கதாக இருந்தது என்று சொல்வதன் வழியாக யூத முறைமைகளைவிட இயேசு கொண்டு வந்துள்ள புதிய நெறி மற்றும் புதிய வாழ்வு முறை மேன்மையானது, உயர்வானது, வாழ்விற்கு வளமை சேர்ப்பது என்பதை இயேசு உணர்த்துகிறார். புதிய வாழ்வை பெறுவதற்கான வழி, இறைவன் ஒவ்வொருவருக்கும் வழங்கியுள்ள திறமைகளையும் கொடைகளையும் தனிப்பட்ட மனிதர்களின் நன்மைக்காக அல்ல, மாறாக பொது நன்மைக்காக பயன்படுத்துவதாகும். எனவே நமது சுயநலன்களை விடுத்து பிறர் நலன் பேண வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

முதல் வாசக முன்னுரை

இன்றைய முதல் வாசகம் இஸ்ராயேல் மக்களின் பாபிலோனிய அடிமைத்தள வாழ்வின் இறுதியில் எழுதப்பட்டது. இஸ்ராயேல் மக்கள் தாங்கள் செய்த பாவத்தின் காரணமாக யாவே இறைவனால் பாபிலோனுக்கு அடிமைகளாக நாடுகடத்தப்பட்டனர். ஆனால் இப்போது இறைவன் அவர்களை புதிய வாழ்விற்கு அழைக்கிறார். இஸ்ராயேல் மக்களையும் எருசலேம் நகரையும் ஒரு பெண்ணாக உருவகித்து இறைவன் அன்பு மொழி பேசுகின்றார். எப்சிபா (அவளில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்) பெயுலா (மணமுடித்தவள்) என்று இறைவன் வழங்கும் புதிய பெயர்கள் அவர் வழங்கும் புதிய வாழ்வையும் புதிய உறவையும் சுட்டிக்காட்டுகின்ற இவ்வாசகத்திற்கு கவனமுடன் செவிகொடுப்போம்.

இரண்டாம் வாசக முன்னுரை

பல்வேறு அருட்கொடைகளை தூய ஆவி வழங்குகிறார். திருப்பணிகள் வழியாக நம்மிடையே பேசுபவரும், நம்முள் பிரசன்னமாகி இருப்பவரும் நமது ஆண்டவர் இயேசு. ஆற்றல்மிக்க செயல்களின் ஆதிகாரணர் தந்தையாம் கடவுள். இவ்வாறு மூவொரு கடவுளும் தங்களுக்குள்ளே பிரிவில்லாமல் ஒரே கடவுளாகச் செயல்புரிகின்றனர். இறைவன் வழங்கும் வரங்கள் ஒரு மனிதனின் தகுதியை முன்னிட்டு அன்று மாறாக திருஅவையின் நலனுக்காக, அதன் வளர்ச்சிக்காக அருளப்படுகின்றது. இவ்வருட்கொடைகளுக்காக இறைவனுக்கு நன்றி சொல்லி அவற்றை நன்முறையில் பயன்படுத்த இறைஞானம் வேண்டி இவ்வாசகத்தைக் கேட்போம்.

அறிமுகப்படுத்துகின்றார். அவர் கையில் செங்கோல், அவரைச்சுற்றி வெற்றியின் சின்னங்கள், வல்லமையும் நீதியும் அவரது பண்புகள். எனவே நாம் எதற்கும் அஞ்சத் தேவையில்லை. இறைவனது பரிவையும், பாசத்தையும் படம்பிடித்துக் காட்டும் இன்றைய முதல் வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

இரண்டாம் வாசக முன்னுரை

பாவத்தால் நாம் இழந்துவிட்ட தெய்வீக வாழ்வை நமக்குத் தரவே இயேசு மனிதராகப் பிறந்தார். தனது மரணத்தாலும், உயிர்ப்பாலும் இந்த அருள் வாழ்வை நாம் பெறுவதற்கு வழி செய்தார். இந்த அருள் வாழ்வை நாம் நமது திருமுழுக்கில் பெற்றிருக்கிறோம். ஊனியல்பு வாழ்வு திருமுழுக்கில் நம்மை ஆட்கொண்ட தூய ஆவியார், நம் அருள் வாழ்வை வளப்படுத்தி வளர்ச்சியடைய அருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

மன்றாட்டுக்கள்

1. அன்பின் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினராகிய நாங்கள் அனைவரும் திருமுழுக்கின் வழியாக பெற்ற அரச, குருத்துவ, இறைவாக்குரைக்கும் பணியைச் செவ்வனே செய்ய உமது அருளை நிறைவாகப் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. இரக்கத்தின் ஊற்றே எம் இறைவா! திருமுழுக்கு பெற்ற நாங்கள் அனைவரும் ஒரே தந்தையின் பிள்ளைகள் என்பதை உணர்ந்து எங்களிடையே உள்ள பிளவுகள் மறைந்து, ஒற்றுமையோடும், சமாதானத்தோடும், தோழமையோடும் வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. தூய ஆவியாரின் வழியாக புதுவாழ்வை எங்களுக்கு வழங்குபவரே எம் இறைவா! திருமுழுக்கு பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஆவிக்குரிய சாட்சிய வாழ்வு வாழவும், அனைவருக்கும் நன்மை தரக்கூடிய வளர்ச்சிப் பாதைக்கு இட்டு செல்லும் பயனுள்ள காரியங்களை செய்து உண்மையான சீடர்களாக இவ்வுலகில் வாழத் தேவையான அருள் வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. கருணையின் ஊற்றே இறைவா! திருமுழுக்கு என்னும் அருள்அடையாளத்தின் வழியாக உமது அருளைப் பெற்ற நாங்கள் அனைவரும், ஊனியல்புக்குரிய வாழ்வை விட்டுவிட்டு ஆவிக்குரிய வாழ்வை நாங்கள் தொடர்ந்து வாழ்ந்திட அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

பொதுக்காலம் 2 ஆம் ஞாயிறு (16-01-2022)

எசா 62:1-5; 1கொரி 12:4-11; யோவான் 2:1-12

திருப்பலி முன்னுரை

திருவழிபாட்டின் பொதுக்காலத்தைத் தொடங்கியுள்ள நம் ஒவ்வொருவரையும், பழைய வாழ்வை அழித்துவிட்டு புதிய வாழ்வை வாழ இறைவன் அழைக்கின்றார். தூய ஆவியை நம் வாழ்வில் செயல்பட அனுமதிப்பதன் வழியாக பழைய பாவ வாழ்வை அழித்துவிட்டு இறைவன்

5. நீங்கள் கடைபிடித்து ---------- இவையே: ஒருவரோடு ஒருவர் உண்மை பேசுங்கள் உங்கள் நகர வாயில்களில் நீங்கள் அளிக்கும் தீர்ப்பு நீதியாகவும் நல்லுறவுக்கு வழிகோலுவதாயும் இருக்கட்டும்.

7. மண்ணுலகை நிலைநாட்டியவரும் மனதரின் ஆவியை ---------- தோற்றுவித்தவருமான ஆண்டவர் கூறுவது இதுவே

8. ---------- ஒரு பகுதி வடக்கு நோக்கியும் மற்றொரு பகுதி தெற்கு நோக்கியும் விலகி நிற்கும்.

9. நீ என் வழிகளில் நடந்து, என் திருமுறைகளைக் கடைப்பிடித்து ஒழுகினால் நீ என் இல்லத்தை ----------

வலமிருந்து இடம்

2. அவர்மேல் குற்றம் சாட்டுவதற்கு அவரது வலப்பக்கத்தில் ---------- நின்று கொண்டிருந்தான்.

4. அங்கே அவர்களிடம் பெற்றுக்கொண்ட பொன் வெள்ளியைக் கொண்டு முடி செய்து தலைமைக் குருவும் யோசதாக்கின் மகனுமான ---------- தலையில் அதைச் சூட்டு.

8. ---------- பாவத்தையும் தீட்டையும் நீக்கித் தூய்மையாக்கும் நீரூற்று தாவீதின் குடும்பத்தாருக்கெனவும் எருசலேமில் குடியிருப்போருக்கெனவும் தோன்றும்.

9. போலி இறைவாக்கினரையும் அசுத்த ஆவியையும் நாட்டிலிருந்து விரட்டி விடுவேன் என்கிறார் படைகளின் ----------

10. சீயோனே! உன் மக்களை யவனருக்கு எதிராக ஏவிவிட்டு உன்னை வல்லவனின் ---------- போல் ஆக்குவேன்

கீழிருந்து மேல்

3. விளக்குத் தண்டின் அருகில் வலப்புறமும் ---------- உள்ள இந்த இரு ஒலிவ மரங்களும் எதைக் குறிக்கின்றன? என வினவினேன்.

4. யூதா குடும்பத்தை ஆற்றல் மிக்கதாய் ஆக்குவேன் ---------- குடும்பத்தை மீட்டருள்வேன்.

6. மக்கள் ஆடுகளைப்போல் சிதறுண்டு ---------- ஆயரில்லாததால் துன்புறுகின்றனர்.

10. மீண்டும் ஆண்டவரின் ---------- செக்கரியாவுக்கு அருளப்பட்டது.

11. லெபனோனே! உன் வாயில்களைத் திறந்துவை நெருப்பு உன் ---------- மரங்களைச் சுட்டெரிக்கட்டும்.

சென்ற மாதத்தின் விடைகள்: மீக்கா, நாகூம், அபக்கூக்கு, செப்பனியா, ஆகாய்

1. ஆகா 1:1; **2.** செப் 1:6; **3.** அப 1:4; **4.** நாகூ 1:2; **5.** மீக் 1:5; **6.** ஆகா 2:5; **7.** செப் 2:3; **8.** அப 2:13; **9.** நாகூ 2:13; **10.** மீக் 2:5; **11.** செப் 3:14; **12.** அப 3:17,18; **13.** நாகூ 3:8; **14.** மீக் 3:7; **15.** மீக் 7:8; **16.** மீக் 6:11; **17.** மீக் 5:2; **18.** மீக் 4:5; **19.** ஆகா 1:15; **20.** செப் 1:18.

விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-01-2022

முகவரி

The Editor
Appadiye Agattum
5/301, Matha Koil Street
Rajiv Gandhi Road
Okkiampet, Chennai - 97

என் வாழ்வில் மரியா

அருள்சகோ. ஜான் பெனடிக்ட் ம.ஊ.ச., பெங்களூரு.

வெண்முகில் பட்டாடைக் கட்டி
பொற்தாரகை முடி சூடி
முழு மதியை தாள் மிதித்தவளே
உலகாளும் உத்தமனை உடல் சுமந்தவளே!

புனித அன்பின் அன்னையே
விண்ணகத் தூதருடன் மேல் நின்று என்னைப் பார்ப்பவளே!
ஓ தூய இரக்கமும் அருளும் நிறைந்தவளே!
உன் மென்முகத்தின் முன் பணிந்து நிற்கிறேன்

உம் தெய்வீக ஒளியுடன்
உங்கள் நிபந்தனையற்ற அன்பும் மிக பிரகாசமாக ஒளிர்கிறது
அது பாவியான எனக்கு
ஆறுதலும், அமைதியும் அளிக்கும் புகலிடம்

வரவேற்கும் கரங்களால் குழந்தையென என்னை ஏந்தினாய்
இனிமையான நறுமணம் கொண்ட உன் மாசற்ற கருணையால்
எனக்கு என்றும் நம்பிக்கையையும் மீட்பையும் கொண்டு வருகிறாய்

உன் புகழ் பறைசாற்ற மரியின் ஊழியன் என வந்திருக்கும்
என்னை ஏற்று உம் திருமகனின் பணியைச் செவ்வனே செய்ய
உன் மலர் கரம் நீட்டி என் சிறு கரம் பிடித்து
அன்பின் பாதையில் அழைத்துச் செல்வாய் அம்மா!!!

ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. ஆனந்தா வார்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.

ஆண்டவரின் திருமுழுக்கு விழா (09-01-2022)
எசா 42: 1-5, 9-11; தீத்து 2:11-14, 3:4-7; லூக் 3:15-16, 21-22

திருப்பலி முன்னுரை

இயேசுவின் குழந்தைப் பருவம் முடிந்து தன்னையே பக்குவப்படுத்திக் கொண்டு, திடப்படுத்திக் கொண்டு தூய ஆவியாரின் கொடைகளால் நிரப்பப்பட்டு பொதுவாழ்வில் காலடி பதிப்பதை இன்றைய பெருவிழா நமக்கு வலியுறுத்துகிறது. கிறிஸ்து மற்றவர்களின் பாவங்களைத் தம்மீது சுமந்துகொள்வதன் முன் அடையாளமே அவர் பெற்ற திருமுழுக்கு. இறைவாக்கினர் எசாயா கூறுவது போல, ''துன்புறும் ஊழியன் இவரே, என் அன்பார்ந்த மகன் இவரில் நான் பூரிப்படைகிறேன்'' என்ற குரல் வானிலிருந்து ஒலித்தது. இதன் வழியாக தந்தையாகிய இறைவன் தன் மகனை உலகிற்கு அடையாளப்படுத்தி, தூய ஆவியால் திருப்பொழிவு செய்து தமது பணியைத் தொடங்கச் செய்கின்றார்.

இயேசுவின் திருமுழுக்கு அனுபவத்தின் வழியாக நாம் அறிந்துகொள்வது, திருமுழுக்கு பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனக்கென்று ஒருசில குறிக்கோளை, இலக்கை தமதாக்கிக் கொண்டு அதில் இறுதிவரை நிலைத்திருக்கத் தம்மை உட்படுத்திக்கொள்ள வேண்டும். நமது திருமுழுக்கில் இறைவனின் இரக்கமும் பரிவும், நேயமும் பிரசன்னமாகியுள்ளது. நமது தகுதியை முன்னிட்டோ, நற்செயல்களை முன்னிட்டோ அல்ல மாறாக, இறைவனின் இரக்கத்தால் அது நமக்கு ஒரு கொடையாக வழங்கப்பட்டுள்ளது. திருமுழுக்கில் நாம் பெற்ற அருள் வாழ்வு தூய ஆவியின் துணையால் வளர வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

முதல் வாசக முன்னுரை

துன்புறும் மக்களுக்கு ஆறுதல் கூறும் பகுதியாக இன்றைய முதல் வாசகம் அமைகிறது. இறைவனை அரசராகவும், ஆயனாகவும் எசாயா